MISSOURI TAMIL SCHOOL

மிசௌரி தமிழ்ப்பள்ளி

501c tax exempt
non-profit organization

ACCREDITED cognia NOA CASI | NWAC | SACS CASI

# அரும்பு

சித்திரை, திருவள்ளுவராண்டு 2052 MAY 2021, இதழ் 12



**ARUMBU Magazine from Missouri Tamil School**



# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடல் உடுத்த நில மடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே! தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!

- மனோன்மணீயம் பெ. சுந்தரனார்

# ஆசிரியர் உரை



எழிலரசி ஆறுமுகம்



கார்த்திகேயன் ரத்தினம்



சுபாராஜேஸ்வரி ஜெய்கணேஷ்

## வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!

ஒவ்வொரு ஆண்டும் மிசௌரி தமிழ்ப் பள்ளி பல சுவையான படைப்புகளையும், செய்திகளையும் சுமந்து வரும் அரும்பு இதழை வெளியிட்டு வருகிறது. இதோ, இந்த ஆண்டும் மெய்நிகர் வகுப்புகள் மூலம் சற்றும் தொய்வில்லாமல் தமிழ்ப்பள்ளி இயங்கி வரும் நிலையில் அரும்பு இதழையும் வெளியிடுகிறது நம் பள்ளி.

உயிர்ம நேயம் உணர்த்தும் தமிழைக் கற்க இந்த ஆண்டு அடியெடுத்து வைத்த மழலை மாணவர்கள், அப்பண்பை பறைசாற்றும் விதம் செல்லப் பிராணிகளின் ஓவியங்களைத் தீட்டி அரும்பு இதழை அலங்கரித்துள்ளனர். 'என் குடும்பம்' என்னும் தலைப்பில் தங்கள் ஓவியங்களால் மேலும் மெருகேற்றியுள்ளனர் நிலை 1 மாணவர்கள்.நிலை 2 மற்றும் 3 மாணவர்களோ எண்ணிலடங்கா அதிசயங்களைக் கொண்ட விண்வெளி குறித்த ஓவியங்களைத் தீட்டியுள்ளனர்.

நம் உறவுகளும் நட்புமன்றோ உள்ளம் வாடும் போது ஊன்றுகோலாகவும், உற்சாகத்தின் திறவுகோலாகவும் இருப்பவை. அத்தகைய உறவுகளைப் பற்றித் தம் உள்ளம் தொட்ட கருத்துக்களைப் பகிர்ந்துள்ளனர் நிலை 4 மாணவர்கள்.

எத்தனை எத்தனை சவால்களை நாம் எதிர்கொண்டோம் இந்த கொரோனா காலகட்டத்தில்! அத்தகைய சூழலில் கருணையின் பங்கு என்ன என்பதைத் தங்கள் எழுத்துக்களால் அருமையாக எடுத்தியம்பியுள்ளனர் நிலை 5 மாணவர்கள்.

அந்நிய நாட்டில் வாழ்ந்தாலும் அன்னைத் தமிழ் மொழியை ஆர்வத்துடன் பயிலும் நம் நிலை 6 மாணவர்கள் , திக்கெட்டும் தாய்மொழி பரவ வேண்டும் என்ற எண்ணத்தை எழுத்துக்களால் வெளிப்படுத்தியுள்ளனர் . நிலை 7 மாணவர்களோ இணையம் வழி இணையும் நாம் என்ற தலைப்பில் தம் சிந்தனைகளைப் பகிர்ந்துள்ளனர்.

தமிழ் பள்ளி தன்னார்வலர்கள் மற்றும் பெற்றோர்கள் தங்கள் கவிதைகள், சிறுகதைகள் மற்றும் ஓவியங்கள் மூலம் அரும்பு இதழை மேலும் அழகுபடுத்தியுள்ளனர். தங்கள் படைப்புகளை அரும்பு இதழுக்கு நல்கிய அனைவருக்கும் நன்றிகள் ! பாராட்டுகள்!

அரும்பு இதழை சிறப்பாக வடிவமைத்த திரு.சுடலை அவர்களுக்கும், இவ்விதழை வெளியிட உறுதுணையாக இருந்த மிசௌரி தமிழ்ப் பள்ளிக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்!

இணையம் வழி இடைநிற்கா தமிழ் கல்வி என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் அட்டைப்படம் வரைந்து தந்த திருமதி. இலக்கியா வெங்கட் அவர்களுக்கும் எங்கள் நன்றிகள்!

தற்போது கொரோனாவால் நிலவி வரும் அசாதரண சூழலிலும் ஆர்வத்தில் சற்றும் குறையாமல் மாணவர்களும், தன்னார்வலர்களும், பெற்றோர்களும் வழங்கிய பல்சுவை படைப்புகளை அரும்பு இதழ் மூலம் உங்களிடம் சேர்ப்பிக்கிறோம். படித்து மகிழுங்கள்!

நன்றி.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| மிசௌரி தமிழ்ப் பள்ளி 2020 - 2021 | 05 |
| மழலை ஓவியங்கள் எனக்குப் பிடித்த செல்லப்பிராணி | 14 |
| வெளிநாட்டு வாழ்க்கை | 17 |
| இணையம் மூலம் இணையும் நாம் | 18 |
| நிலை 1 ஓவியங்கள் - என் குடும்பம் | 19 |
| நிலை 4 உள்ளம் தொட்ட உறவுகள் | 22 |
| அமெரிக்கக் காற்பந்தாட்டம் | 27 |
| பயன்தரும் பாரம்பரிய விளையாட்டா ? பயம்தரும் தற்கால விளையாட்டா ? | 28 |
| நிலை 2 ஓவியங்கள் வியக்க வைக்கும் விண்வெளி | 30 |
| கடல் | 32 |
| போய் விடு கொரோனா போய்விடு!!! | 33 |
| சொர்க்கமே என்றாலும் | 34 |
| திக்கெட்டும் பரவட்டும் தேமதுர தமிழோசை | 35 |
| தன்னிலிருந்து விடுபடு | 37 |
| இருளின் ஒளி | 38 |
| நிலை 3 ஓவியங்கள் வியக்க வைக்கும் விண்வெளி | 39 |
| கருணையால் வெல்வோம் கொரோனாவை | 41 |
| புகைப்படத்தொகுப்பு | 48 |




# மிசௌரி தமிழ்ப் பள்ளி 2020 – 2021

*மிசௌரி தமிழ்ப் பள்ளியின் 2020-21 கல்வி ஆண்டிற்கான அரும்பு இதழ் வழியாக தங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. நோய்த் தொற்று இன்னும் சில மாதங்களில் முடிந்து இயல்பு நிலை விரைவில் திரும்பும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது. இந்த தொற்று நோய் பரவலுக்குத் தடுப்பு மருந்து கண்டுபிடித்த ஆராய்ச்சியாளர்களுக்கும், மக்களைக் காக்க முன்வந்த மருத்துவர்களுக்கும், செவிலியர்களுக்கும் முதலில் நம் பள்ளியின் நன்றியை உரித்தாக்குவோம்.*



**செந்தில் இராதாகிருட்டிணன்**

தொடங்குக பணியைத் தொடங்குக அறத்தை!

கடலிலும், வானிலும், கவினுறு நிலத்திலும்,
வாழ்வுயிர் அனைத்தும் மக்கள் கூட்டமும்,
வாழுமாறு - அன்பு மணிக்குடை யின்கீழ்
உலகினை ஆண்டார் உயர்வுற நம்மவர்!

தொடங்குக பணியை! அடங்கல் உலகும்
இடும்நம தாணை ஏற்று நடக்கவும்
தடங்கற் சுவரும் சாய்ந்துதூளாகவும்
தொடங்குக! செந்தமிழ்ச் சொல்லால் செயலால்
தடம்பெருந்தோளால் தொடங்குக 'பணியை'!

– *பாவேந்தர் பாரதிதாசன்*

*“தொடங்குக பணியைத் தொடங்குக அறத்தை”, “தடங்கற் சுவரும் சாய்ந்துதூளாகவும் தொடங்குக! செந்தமிழ்ச் சொல்லால் செயலால் தடம்பெருந்தோளால் தொடங்குக ‘பணியை’!” என்ற பாவேந்தரின் வரிகளைக் கருத்தில் கொண்டு, தடைகள் பல வரினும்*



மழலை




மழலை

எங்கள் தமிழ்ப் பணி தொடரும் என்ற நோக்குடன், இந்த கல்வி ஆண்டின் தொடக்கத்திலிருந்து இணைய வழியாகத் தமிழ் மொழியை மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் பணியை, எங்கள் இரு கிளை ஆசிரியர் குழுவினர்கள் மிகச் சிறப்பாக முன்னெடுத்துச் செல்கின்றனர்.

இந்த ஆண்டு எங்கள் ஆசிரியர்கள் சிறப்பாகத் திட்டமிட்டு, பாடங்களின் மின் நகல்களை இணைய வழி வகுப்பில் பகிர்ந்து, உரைநடை , பாடல், திருக்குறள், கதை, இலக்கணம், உரையாடல் என்ற பல பரிமாணங்களில் மொழியைப் பயிற்றுவித்து மாணாக்கர்களின் பேச்சுத் திறன், புரிதல் திறன், வாசிக்கும் திறன், எழுதும் திறன் என்ற மொழி அடிப்படை திறன்களை அவர்களின் நிலைக்கேற்ப வளர்ச்சி அடையும் வகையில் பொதுப்பள்ளிகளுக்கு இணையான தரத்தில் மாணவர்களுக்குத் தமிழ் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் இணைய வழி வகுப்புகள் நடை பெற்று வருகின்றது. பள்ளி நிர்வாக குழுவினரும், கிட்டத்தட்ட 80 தன்னார்வலர்களும் தங்களைப் பள்ளியுடன் இணைத்துக் கொண்டு அடுத்த தலை முறைக்கு நம் மொழியையும், பண்பாட்டையும் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற ஒற்றை குறிக்கோளுடன் பல ஆண்டுகளாக மிகுந்த ஒற்றுமையுடனும், பொதுநலத்துடனும் செயல்பட்டு வருகின்றனர். பள்ளி மாணவர்களும் இந்த பேரிடர் காலத்தில் தகவல் தொழில் நுட்பத்தைச் சிறப்பாகப் பயன்படுத்தி மொழியை சீரிய முறையில் கற்றுத் தேறி வருகின்றனர் என்பது மட்டற்ற மகிழ்ச்சி. இந்த கல்வி ஆண்டில் பால்வின் கிளையில் 218 மாணவர்களும், ஓபாலன்

நிலை 1



நிலை 1







**மழலை**

**நிலை 1**

கிளையில் 60 மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

இத்துடன், பள்ளியின் செயற்குழுவில் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு பள்ளியின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்ற திரு. இராசா கிருஷ்ணசாமி மிசௌரி தமிழ்ப் பள்ளியின் ஓபாலோன் கிளையின் முதல்வராகப் பொறுப்பேற்று மிகச் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கின்றார். வாழ்த்துகள் இராசா !!

அதேபோல், கடந்த 15 ஆண்டுகளாக உழைத்து மிசௌரி தமிழ்ப் பள்ளி வளர்ச்சிக்கு மிகப் பெரிய தூணாக நின்று, ஓபாலன் கிளையில் சிறப்புடன் முதல்வராகப் பல ஆண்டுகள் பணியாற்றி, பள்ளியின் அனைத்து முன்னெடுப்பிலும் முன்னோடியாக விளங்கி, பால்வின் கிளை தற்போது செயல்பட்டுக்கொண்டிருக்கும் கட்டமைப்பைப் பெற முழு அர்ப்பணிப்புடன் பணியாற்றிய திரு. சிவசங்கர் சங்கரநாராயணன் அவர்கள் மிசௌரி தமிழ்ப் பள்ளியின் இயக்குநராகப் பொறுப்பேற்றுள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பொறுப்பை ஏற்று, நம் இரு கிளைகளின் முதல்வர்கள், துணை முதல்வர்கள், ஆசிரியர்கள், தன்னார்வலர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் சீரிய முறையில் ஒருங்கிணைத்து, பள்ளியை மேலும் வளர்ச்சிப் பாதையில் பயணிக்க முன்னின்று செயல்பட முன்வந்தமைக்கு சிவா அவர்களுக்கு உங்கள் அனைவரின் சார்பிலும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நிலை 2**

**நிலை 2**





## நிலை 2



## நிலை 3





## நிலை 4



## நிலை 4

### பெற்றோர் கூட்டம்

*பள்ளியின் இரு கிளை முதல்வர்களும் இந்த கல்வி ஆண்டு தொடக்கத்தில், பெற்றோர் கூட்டத்தையும் இணைய வழியாக நடத்தி இந்த ஆண்டிற்கான திட்டங்களையும், பள்ளி விதி முறைகளையும் மற்றும் ஆசிரியர்கள் பற்றிய தகவல்களையும் தெரியப்படுத்தி, பள்ளிக்குப் பெற்றோரின் நல் ஆதரவை வழங்குமாறும் கேட்டுக்கொண்டனர். அதற்கேற்ப, அனைத்து பெற்றோர்களும் தங்களின் ஆதரவை வழங்கி, whatsapp செயலி வழியாகவும், மின்னஞ்சல் வாயிலாகவும் ஆசிரியர்கள் தெரிவிக்கும் தகவல்களைப் பெற்று மாணவர்கள் குறித்த நேரத்தில் வகுப்பில் இணையவும், வீட்டுப் பாடங்களைக் குறித்த நேரத்தில் செய்து முடித்து இணையத்தில் சமர்ப்பிக்கவும் மிகவும் உறுதுணையாக உள்ளனர் என்பதில் ஐயமில்லை.*

### பாடத்திட்டம் :


எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்.
இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்.
வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாங் கண்டு
தெளியுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்.
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்.

*மேற்குறிப்பிட்ட பாவேந்தர் பாரதிதாசன் வரிகளுக்கேற்ப, நம் ஆசிரியர்கள் அமெரிக்கத் தமிழ்க் கல்விக் கழகத்தின் பாடத்திட்டப் புத்தகங்களை மேலும் பாடங்களை எளிமைப் படுத்தியும்,*

நிலை 3




நிலை 3





நிலை 4



நிலை 5

மாணவர்களுக்கு புதிய சிந்தனைகளை மொழியின் வாயிலாகத் தூண்டும் நோக்கில் ஒரு சில கையேடுகள் தயாரித்தும், வேறு சில புத்தகங்களிலிருந்து குறிப்பெடுத்து மாணவர்களுக்கு மொழி எளிதில் புரியும் வகையில் வடிவமைத்துள்ளனர். வரும் ஆண்டில் பாடங்களை மேலும் சீர் செய்து கற்பிக்க எல்லா முயற்சிகளையும் பள்ளியின் நிர்வாக குழு முன்னெடுத்துச் செல்லும் என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

## தரமதிப்பீட்டு முறை

கடந்த சில ஆண்டுகளாக ஆசிரியர்களிடம் இருந்து பெறப்பட்ட பின்னூட்டத்தின் அடிப்படையில், மாணவர்களின் பள்ளி வருகை பதிவு, ஆண்டு செய்முறை பயிற்சி, வீட்டுப்பாடம் ஆகியவற்றை ஊக்குவிக்கும் வண்ணம் மாணவர்களின் தரமதிப்பீடு அமைக்கப்பட்டுள்ளது.

| Category | Percentile |
|---|---|
| Attendance | 21 |
| First Semester | 20 |
| Second Semester | 20 |
| Annual Project | 10 |
| SURWEP | 8 |
| Home Work | 21 |

## SURWEP (Speak-Understand-Read-Write Evaluation Process) – மொழித்திறன் மதிப்பீடு

இந்த ஆண்டிற்கான முதல் பருவத் தேர்வை வெற்றிகரமாக முடித்து விட்டார்கள். மாணவர்களின் தமிழ்க் கல்வித் திறனை மதிப்பீடு செய்வதற்கு, பருவத் தேர்வுகளைத் தவிர, தமிழ் மொழி பேச்சுத் திறன்,

## நிலை 5





## நிலை 5




கேட்புத் திறன், படிப்புத் திறன், எழுத்துத் திறன் போன்ற நான்கு முக்கிய திறன்களை மதிப்பீடு செய்வதற்கான *"Speak-Understand-Read-Write Evaluation Process (SURWEP)"* என்னும் வழிமுறையைச் சில ஆண்டுகளாக நடைமுறைப் படுத்தியுள்ளோம். இந்த முறையைப் பயன்படுத்தி மாணவர்களின் மொழித் திறன்களைப் பரிசோதனை செய்து, ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட வளர்ச்சிக்குத் தேவையான திறனை நன்கு பயிற்றுவித்து, இந்த நான்கு திறன்களையும் மாணவர்களுக்கு வலிமைப் படுத்துவதுதான் இதன் நோக்கம்.

இந்த ஆண்டும், வரும் வகுப்புகளில் இந்த முறையின் மூலம் மாணவர்களின் தமிழ் மொழி திறன் மதிப்பீடு நடைபெறும். இதற்கு எந்த ஒரு சிறப்புப் பயிற்சியும், முன்னறிவிப்பும் தேவை இல்லை. நிலை ஆசிரியர் அல்லது பொறுப்பாளர், பருவத் தேர்வு நடைபெறுவதற்கு முன்பு அல்லது பின்பு, இந்த முறையைப் பின்பற்றி மதிப்பீடு செய்து, மாணவர்களுக்கு நன்கு பயிற்சி அளிப்பார்கள் என்பதைத் தெளிவு படுத்திக் கொள்கிறோம்.

### தமிழிசை நிகழ்ச்சி

மிசௌரி தமிழ்ச் சங்கம் தமிழிசை நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக இணைய வழியே ஏற்பாடு செய்து நம் தமிழ்ப் பள்ளி மாணவர்கள் அவர்களின் தமிழிசைப் பாடல் திறன்களை வெளிப்படுத்த மிகப் பெரிய வாய்ப்பினை வழங்கினர். மாணவர்கள் சிறப்பாக தங்கள் பாடல் மற்றும் இசைத் திறனை இந்நிகழ்ச்சியின் மூலம் மிகச் சிறப்பாக வெளிப்படுத்தி மகிழ்ந்தனர். தமிழ்ச் சங்கம் தொடர்ந்து பள்ளிக்கு அளித்து வரும் ஆதரவிற்கும் மற்றும் வாய்ப்பளித்த மிசௌரி தமிழ்ச் சங்க


## நிலை 8




## நிலை 8



## நிலை 6



## நிலை 6



செயற்குழுவிற்குத் தமிழ்ப் பள்ளியின் நன்றிகள் பல.

### சிநேகிதியே


தமிழ்ப்பள்ளி மகளிர் தன்னார்வலர்கள் ஒன்றிணைந்த "சிநேகிதியே" நிகழ்ச்சி மெய்நிகர் நிகழ்வாக நடந்தேறியது. ஆடல், பாடல், மற்றும் கருத்துக்கள் / சிந்தனைகள் பரிமாற்றம் என நம் மகளிர் தன்னார்வலர்கள் தம் தம் திறமையை காட்டி நிகழ்ச்சியை மெருகூட்டினர்.

### தமிழ்த்தேனீ போட்டிகள்

பாடம் தவிர்த்து மாற்று வழிகளில் தமிழ்த் திறனை வளர்க்கும் வகையில், பல பிரிவிலும் தமிழ்த் தேனீ போட்டிகள் ஏப்ரல் 17 அன்று இணைய வழியாக மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாணவர்கள் பொதுப் பள்ளியில் படிக்கும் வகுப்பிற்கேற்ப தமது பிரிவில்,சொல்லுக சொல்லை (Grade 1), அந்தாதி கதைகள் (Grade 2 & 3), சித்திரம் பேசுதடி (Grade 4 & 5), பேச்சுப் போட்டி (Grade 6+), படம் வரைதல், திருக்குறள் போட்டிகள் போன்றவற்றில் ஒன்று அல்லது அனைத்து போட்டிகளிலும் கலந்து கொள்ளலாம் என கூறப்பட்டது. இதில் 150க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டார்கள். போட்டியில் கலந்து கொண்ட மற்றும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

### இளையோரை முன்னிறுத்தல் மற்றும் முன்னாள் மாணவர் அமைப்பு:

நம் தமிழ்ப்பள்ளியில் கடந்த சில வருடங்களாக, நம் பள்ளியின் முன்னாள் மாணவர்கள், தன்னார்வலர்களாக பங்கேற்று மிகச் சிறப்பாக தமிழ்ப் பள்ளியை நடத்திச்





## சிநேகிதியே



## தமிழ்த்தேனீ போட்டிகள்

செல்வதற்கு ஆசிரியர்களுக்கும் மற்றும் நிர்வாக குழுவிற்கும் பேருதவியாக உள்ளனர். வருங்காலத்தில், தமிழ்ப் பள்ளியை தொடர்ந்து நடத்தும் பொறுப்பை நம் தமிழ்ப்பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவர்கள் கையில் தான் உள்ளது என்பதை பள்ளியின் நிர்வாக குழு நன்கு உணர்ந்துள்ளது. இதனை அடிப்படையாக கொண்டு, நம் பள்ளியின் முன்னாள் மாணவர்கள் சந்திப்பதற்கான ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, அவர்களுக்குள் கலந்துரையாடல் செய்து, அவர்களிடமும் பள்ளியின் செயல்பாடுகள், பாடத்திட்டம், மாணவர்களை அறப்பணி, தமிழ்ப் பண்பாடு போன்றவற்றை இப்போதுள்ள காலசூழலில் அவர்களின் அனுபவத்தில் கிடைத்த நிகழ்வுகளை பின்னூட்டமாக பெற்று அதன் அடிப்படையில் தேவையான மாற்றங்களை செய்யும் நோக்கமும் எங்களிடம் உள்ளது. பள்ளி இளையோருக்கானது, அவர்களின் ஆலோசனை பள்ளி நிர்வாகத்திலும், தமிழ்க் கல்வியை முன்னெடுப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கும் என்பது அவசியமான ஒன்று. இப்பயணம், ஒரு கட்டத்தில் பள்ளியின் முழுமையான நிர்வாகத்தை நம் முன்னாள் மாணவர்களிடம் அளித்து, நாம் அனைவரும் அவர்களின் பின்னின்று உழைத்து நம் தமிழ்ப் பள்ளியை மேலும் சிறப்படையச் செய்வோம். நினைத்ததை முடித்துக்காட்டும் வல்லமை நம் இளையோருக்கு உண்டு, விடியலுக்கு புது விதியொன்றை நாம் தருவோம், விளக்கேற்றி வருங்காலத்தை வரவேற்போம். எனவே, அதற்கான முயற்சிகளில் செயல்பட தங்கள் அனைவரின் ஆதரவையும் வழங்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

### இந்த ஆண்டில் பள்ளியின் குறிப்பிடத்தக்க செயல்பாடுகள்:

- *Rockwood school district* உடன் இணைந்து செயல்பட்டு தமிழ்ப் பள்ளியின் ஒரு மாணவிக்கு இரண்டு தரப் புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இந்த தொடர்பு இன்னும் பல மாணவர்களுக்கு தரப் புள்ளிகள் பெறவும், இரு மொழிச் சான்றிதழ் பெறவும் வழி வகுக்கும்.
- லாபநோக்கமற்ற அமைப்பிற்கான வரி விலக்கு *501(c)(3) - Non-Profit Tax exemption Status* பெறப்பட்டுள்ளது.
- புதிய வடிவத்தில் *Zoho* - பள்ளி சேர்க்கை விண்ணப்ப படிவம் உருவாக்கப்பட்டுள்ளது
- *PayPal* - பெற்றோர்களின் வசதிக்காக இணைய வழி பணம் செலுத்துதல் விண்ணப்ப படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

- *Zoom* காணொளி பல்வழி இணைப்பு தொழில் நுட்பத்தை பயன்படுத்தி தமிழ் வகுப்புகளை நடத்துதல்
- *Cognia* பள்ளியின் அங்கீகார சான்றிதழை புதிப்பிப்பதற்கான ஆய்வுகளை முடித்து அதனை நோக்கிய பயணத்தை தொடங்கிவிட்டோம். இதற்கான பணிக்கு தங்களின் முழு ஆதரவையும் பள்ளிக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.
- மிசௌரி மாகாண வரி விலக்கு பெறுவதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்க அரசின் வரி விலக்கு 501(C)(3) மற்றும் அதன் மூலமாக பள்ளிக்கு கிடைக்கும் பயன்கள்:

நம் பள்ளிக்கு அமெரிக்க அரசின் லாப நோக்கமற்ற நிறுவனத்திற்கான வரி சலுகை 501(c)(3) பெறப் பட்டதால் நம் பள்ளிக்கு பின்வரும் தன்னார்வலர்கள் தங்கள் தன்னார்வ நேரத்தை போற்றும் வகையில் அவர்கள் பணிபுரியும் நிறுவனங்களிடம் இருந்து நிதி மானியம் (Grant) கிடைத்துள்ளது. நம் தன்னார்வலர்கள், அவர்களின் நேரத்தையும் பள்ளிக்கு செலவிட்டு, தங்கள் பணியாற்றும் நிறுவனங்களிடம் இருந்து அந்த சேவையை போற்றும் வகையில் நிதியும் பெற்றுத்தருவது பாராட்டுக்கும், போற்றுதலுக்கும் உரியது. அவர்களுக்கு பள்ளியின் சார்பில் மிக்க நன்றி.

1. திருமதி . அருணா குமார் 2. திருமதி. தீபா ரகு 3. திரு. நந்தகுமார் ஹரிதாஸ்

4. திரு. ராஜா கிருஷ்ணசாமி 5. திரு. தனபால் ராதாகிருஷ்ணன் 6. திரு. செந்தில் ராதாகிருஷ்ணன்

## 501(C)(3) மூலமாக பள்ளிக்கு கிடைக்கும் பயன்கள்

- பள்ளிக்கு நிதி அளிப்பவர்கள் அதற்கான நிதிக்கு வரி விலக்கு (Charity Tax deduction) பெற முடிகிறது.
- பள்ளிக்கு நிதி அளிப்பவர்கள், தங்கள் பணிபுரியும் நிறுவனங்களிடம் இருந்து அதற்கு இணையான நிதியை (Matching Grant) பெற முடிகிறது.
- பேரிடர் நேரங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்க நிதி (Charity) திரட்ட மிக உறுதுணையாக உள்ளது.
- ஹார்வர்ட் தமிழ் இருக்கை மற்றும் தமிழ்ப் பள்ளி வளர்ச்சிப் பணிகளுக்கு நிதி திரட்ட பேருதவியாக இருக்கும்.
- பள்ளிக்கு வாங்கும் பொருள்களுக்கு வரி விலக்கு.
- பள்ளிக்கு அரும்பு இதழ் விளம்பரதாரர்கள் (Sponsors) அளிக்கும் நிதிக்கு வரி விலக்கு

தமிழ்ப் பள்ளி அங்கீகாரம் பெற்று, நம் பள்ளியில் பயின்று, பொது பள்ளியில் மேல் நிலை பயிலும் மாணவர்களுக்கு உலக மொழி மதிப்பீடு பெறுவதற்கும், இரு மொழி சான்று பெறுவதற்கும், அமெரிக்கா அரசின் வரி விலக்கு பெறுவதற்கும் , பொதுப் பள்ளி அளவிற்கு சிறந்த தரத்துடன் வகுப்புகள் நடை பெறுவதற்கும் தங்கள் அனைவரின் தன்னலமற்ற சேவை தான் முக்கிய காரணம். தாங்கள் இது நாள் வரை பள்ளிக்கு வழங்கிய ஆதரவையும், ஒத்துழைப்பையும் திரு. சிவசங்கர் அவர்களுக்கும் வழங்கி தொடர்ந்து பள்ளியை பெரு வளர்ச்சியை நோக்கி பயணிக்க உறுதுணையாக இருக்குமாறு அன்போடு வேண்டிக்கொள்கிறேன். வரும் காலங்களில் , நிலைப் பொறுப்பாளர், தமிழ் தேனீ ஒருங்கிணைப்பாளர், பொங்கல் விழா நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர், அரும்பு இதழ் ஆசிரியர், பள்ளியின் அங்கீகாரம் மற்றும் தொழில் நுட்ப உதவி துணைக்குழுக்களிலும், செயற்குழுவிலும் பணியாற்ற விருப்பம் இருந்தால் உங்கள் ஆர்வத்தை அதற்க்கான விண்ணபத்தில் பதிவு செய்து விட்டால், பள்ளி நிர்வாக குழு விண்ணபத்தை பார்வையிட்டு சரியான நேரத்தில்,தேவைக்கேற்ப விருப்பம் உள்ளவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பள்ளி வளர்ச்சிக்கு, பெற்றோர்களின் பின்னூட்டம் மற்றும் ஆதரவு மிகவும் அவசியம். எனவே, பாடப்புத்தகம், வீட்டுப் பாடம் மற்றும் பள்ளி நிகழ்வுகள் பற்றிய உங்கள் ஆலோசனைகளை எங்களுக்கு தெரியப்படுத்தவும். பள்ளி பெற்றோர்கள் கூட்டங்களில் தவறாது கலந்து கொண்டு, உங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

பள்ளியின் செயல்பாடுகளுக்கும் வளர்ச்சிக்கும் தொடர்ந்து உழைத்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் அனைவருக்கும் மீண்டும் மிசௌரி தமிழ்ப் பள்ளியின் நன்றிகள். நமது பள்ளியின் முன்னேற்றத்திற்கு, உங்களது ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை பள்ளியின் மின்னஞ்சல் school@missouritamilsangam.org என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்கவும்

தொடர்ந்து பயணிப்போம் , மிக்க நன்றி !!

**செந்தில் இராதாகிருட்டிணன்**

**தலைவர், மிசௌரி தமிழ்ப் பள்ளி**


# மழலை ஓவியங்கள்
## எனக்குப் பிடித்த செல்லப்பிராணி





அபிகாயில் ஜாகீர்




அமலா பெர்னாண்டோ




ஹரிஹரன் வி




அயிஷா





ஹிதேஷ் மனோஜ்குமார்




ரித்திகா தமிழானந்த்




ஸ்ரீநிதி சுரேஷ்குமார்




தருண்கேஷவ் பிரவீன்குமார்



நவேந்தன் விஜயவர்மன்



தியா செந்தில்



நிஹான் ரஃபிக்



ரித்திகா அருண் கார்த்திக்



ருக்மிணி லால்கோபால்



ஸ்கந்தா ரமேஷ்




ஷிரஷ்திதா சிவஷண்முகம்



ஸ்ருதி சீனிவாசன்




வெளிநாட்டு வாழ்க்கையும், நாம் பிறந்து வளர்ந்த தாய்நாட்டின் வாழ்க்கையும் மிகவும் வேறுபட்டது. வெளிநாட்டு வாழ்க்கை சில நேரம் நன்றாக இருந்தாலும் மொழி, விதிமுறைகள், மற்றும் அன்றாட செலவு போன்ற மூன்று முக்கிய காரணங்களால் அது கடினமாக இருக்கிறது.

முதல் முக்கிய காரணம் மொழி. பொதுவாக வெளிநாட்டினர்கள் அதிகம் இந்த பிரச்சனைகளை எதிர்கொள்வார்கள். இதனால் அவர்கள் சுற்றி இருக்கும் மக்களிடம் பேசமுடியாது. அவர்களுடைய குழந்தைகளும் இதே பிரச்சனையை பள்ளிக்கூடத்தில் எதிர்கொள்வார்கள்.



**சந்தோஷ் ஜோதிலிங்கம்**

இரண்டாவது பெரிய பிரச்சனை, விதிமுறைகள். ஒவ்வொரு நாட்டிற்கு செல்லும் போது விதிமுறைகள் வித்தியாசமாக இருக்கும். இது முன்பே தெரியாமல் புது நாட்டிற்குச் சென்றால், கடினமான பிரச்சனைகளை ஏற்படுத்தும். ஒரு உதாரணத்திற்கு, இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குச் சென்றால், வாகனங்களை இடது பக்கத்திற்கு பதிலாக வலது பக்கத்தில் ஓட்ட வேண்டும். இந்த மாற்றத்தைப் பழகுவதற்கு நிறைய நாட்கள் ஆகும்.

கடைசி காரணம் அன்றாட செலவு. நீங்கள் உங்களுடைய புது நாட்டில் எப்படி வாழ்வீர்கள் என்பது மாறும். உதாரணத்திற்கு, இந்தியாவில் வீட்டு வாடகை மற்றும் பொருள்களின் விலை குறைவு. மேற்கண்ட காரணங்களால் வெளிநாட்டு வாழ்க்கையும், பிறந்து வளர்ந்த தாய்நாட்டின் வாழ்க்கையும் மிகவும் வேறுபட்டதாகும்.



# இணையம் மூலம் இணையும் நாம்

கோவிட்-19 உலகளாவிய தொற்றுநோய் சமுதாயத்தில் ஒரு நீடித்த மறக்கமுடியாத அடையாளத்தைப் பதித்து விட்டது. கோவிட்-19முக்கியமாக ஒருவருக்கொருவர் நெருக்கமாக இருப்பதன் மூலமாக பரவுகிறது என்று கருதப்படுகிறது. ஆகையால் ஒவ்வொருவரும் 6 அடி இடைவெளியில் இருக்கும்படி அறிவுறுத்தப்படுகிறது. இந்த கடினமான காலங்களில், நம் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் சிறப்பாக மாற்ற இணையம் தொடர்ந்து உதவுகிறது. 25 ஆண்டுகளுக்கு முன்பு சாத்தியமில்லாத வகைகளில் இணையம் இக்காலகட்டத்தில் நமக்கு சமூக ரீதியாக இணைந்திருக்க உதவுகின்றது. சமூக வலைப்பின்னல்கள் மற்றும் வீடியோ அரட்டைகள் முதல் தீர்வுகள் மற்றும் உற்பத்தித்திறன் கருவிகள் வரை, ஆன்லைன் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் மக்கள் தொடர்ந்து இணைந்து இருக்கவும் அவர்களுக்கு தேவையான ஆதரவை பெறவும் புதுமையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் உதவுகின்றன இவை அனைத்தும் வீட்டிலிருந்தபடியே செய்ய முடிகிறது. பள்ளிக்குச் செல்லாமல் வீட்டிலிருந்து படிக்கவும், அலுவலகம் செல்லாமல் அலுவலக வேலைகளை செய்வதற்கும் பார்ப்பதற்கும் நாம் இணையத்தையே சார்ந்திருக்கிறோம்.



**சுஜீத்பாலா ராஜகோபால்**


உலகத்தில் உள்ள இசைப் பிரியர்களுக்கு இசைக் கச்சேரிகள் இணையத்தின் மூலமாக நடைபெறுகின்றன அதுமட்டுமில்லாமல் பிறந்தநாள், திருமண நாள், திருமணங்கள், மருத்துவ கலந்தாலோசனை, மற்றும் எண்ணிலடங்கா செயல்கள் தற்போது இணையத்தின் மூலமாகவே நடந்து கொண்டிருக்கின் றன. மக்கள் ஒருவருக் கொருவர் ஆதர வளிக்க குறிப்பாக நிதி திரட்டுவதற்கு இணையம் ஒரு சக்தி வாய்ந்த கருவியாக நிரூபிக்கப்பட் டுள்ளது.

கோவிட்–19 எவ்வாறு கையாளுவது என்பது குறித்து புதுமையான யோசனைகளை பகிர்ந்துகொள்ள விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் பயன்படுத்துகின்றனர். காலத்தின் கட்டாயத்தால் நாம் அனைத்து பணிகளையும் இணையத்தின் மூலமாக நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இந்த சோதனை காலம் முடிந்த பிறகு இணையத்துடன் மனித இனத்தின் இயல்பான உணர்வையும் பேணிக்காக்க முயற்சிக்க வேண்டும்.


# நிலை 1 ஓவியங்கள் - என் குடும்பம்




ஆதித்யா விஜயச்சந்தர்




குஷி கண்ணன்



சக்திதரன் ஆடலரசு




அக்ஷிதா சக்திவேல்



அத்விக் சாய்



ஆராத்யா கலைச்செல்வன்



ஆல்பினா ஜோசப்



கமலேஷ்வர் கணேஷ்




கவின்யா கண்ணன்




கவிஷ் சட்டநாதன்



கிரிஷ்சிவ் இராக்கேஷ்



கௌதம் ஜெயபிரகாஷ்


கௌதம் கிருஷ்ணா பிரபாகர்


க்ஷேத்ரா கந்தசாமி


சக்திஸ்ரீ சிக்கல் குமார்



சாய் அக்ஷயா கந்தசாமி




சாய் சஞ்ஜனா ராம் கோபால்


சித்தார்த்தன் சிக்கல் குமார்



சு. மோவிதா



தருண் கௌதம்


தனிஷ்கா சந்திரசேகரன்


தனுஷ் சரவணன்



தீரா இராணி


பிரதியுன் மூர்த்தி




ரிஸ்வானா பாஷா



வசந்த் விஜய்குமார்




வெங்கட் பாபு கந்தாள



ஸ்ரீவைஷ்ணவி ஆறுமுகம்



ஸ்ரீவர்ஷினி கிங்ஸ்ரீ



ஹரிணி செந்தில்




ஆகாஷ் விஜயச்சந்தர்

## நிலை 4

# உள்ளம் தொட்ட உறவுகள்





நான் என் அம்மாவை மிகவும் நேசிக்கிறேன் . என் அம்மா என் வேலையைச் செய்ய எனக்கு உதவுகிறார்கள். என் அம்மா என் எல்லா விருப்பங்களையும் பூர்த்தி செய்கிறார்கள். என் அம்மா அழகாக இருக்கிறார்கள். என் அம்மா எல்லோரிடமும் கனிவானவர், சில முறை கண்டிப்பானவர், புத்திசாலி . என் அம்மா சுவையான உணவு செய்து தருகிறார். நான் அறிந்த சிறந்த ஓவியக் கலைஞர் என் அம்மா. அவர் ஒரு நல்ல ஆசிரியர் மற்றும் ஒரு சிறந்த அம்மா. அவர் எனக்கு ஓவியம், பள்ளி வீட்டுப்பாடம் கற்றுக்கொடுக்கிறார். அவர் எப்போதும் என்னுடன் விளையாடுவார். அவர் எப்போதும் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க வேண்டும் என்று நான் கடவுளை வேண்டுகிறேன். நன்றி

**கணிஷ் டில்லிபாபு , நிலை 4**



## எனக்குப் பிடித்த என் தாத்தா

எனக்குப் பிடித்த உறவுகளில் ஒன்று என் தாத்தா. அவர் சிங்கப்பூரில் இருக்கிறார். தாத்தா என்னுடன் கால்பந்து விளையாடுவார். தாத்தா எனக்கு கால்பந்து சட்டைகளை வாங்கிக்கொடுப்பார். தாத்தாவுக்கும் எனக்கும் பிரியாணி சாப்பிடப்பிடிக்கும்.தாத்தா எனக்கு நல்ல நண்பர்.நன்றி

**–நவின் சிவராஜன்**

## பாட்டி

எனக்கு என்னுடைய பாட்டியை ரொம்ப பிடிக்கும்!
என்னுடைய பாட்டி ருசியாக சமையல் செய்வார்கள்.
எனக்குப் பிடித்த கொளுக்கட்டை நன்றாக செய்வார்கள்.
கடைக்குப் போய் புதுச் சட்டை வாங்கி தருவார்கள்.
நான் தூங்கப் போகும் போது தடவி விடுவார்கள்.
என்னுடைய பாட்டி எனக்கு கதை சொல்வார்கள்.

**– விக்னேஷ் ஜோதிலிங்கம்**





# அம்மா

எனக்கு பிடித்த உறவு என் அம்மா. என் அம்மா எனக்கு பிடித்த உணவு செய்து தருவார்கள். என் அம்மா எனக்குப் வேண்டும் என்கிற உதவியை செய்வார்கள். என் அம்மா எனக்கு புது விளையாட்டுகள் கற்றுத்தருவார்கள். எனக்குப் பிடித்த பயிற்சி வகுப்புகள் எல்லாம் சேர்த்து விடுவார்கள்.

**– நீலவேணி**




# என் தங்கை

எனக்குப் பிடித்த உறவுகளில் ஒன்று தங்கை. என் தங்கையின் பெயர் நித்திலா. அவள் மிகவும் வேடிக்கையாக விளையாடுவாள். நித்திலாவுக்கு என்னுடன் நடனமாட பிடிக்கும். எப்பொழுதும் குறும்புத்தனமாக செயல்படுவாள். அவளை எனக்கு மிகவும் பிடிக்கும்.

**சஹானா பரதன்**

# என்னுடைய பாட்டி

என் பெயர் சஞ்ஜிதா. எனக்கு மிகவும் பிடித்த உறவு என் பாட்டி. என்னுடைய பாட்டியின் பெயர் திருமதி.ராஜேஸ்வரி. நான் என் பாட்டியை ராஜி ஆத்தா என்று கூப்பிடுவேன். எனக்கு என் பாட்டியை பிடிக்கும். அவர் தினமும் என்னுடன் தொலைபேசியில் அன்பாக பேசுவார்கள். தினமும் அன்றாட செய்தியை அறிந்து கொள்வார்கள். என்னுடன் என்றும் அன்பாக நடந்து கொள்வார்கள். என்னுடைய பிறந்தநாளுக்கு புத்தாடை இந்தியாவிலிருந்து அனுப்பி வைப்பார்கள்.



**சஞ்ஜிதா**



# என் அன்புத் தங்கை 'ஷ்ரியா'

நான் என் அன்புத் தங்கை ‘ஷ்ரியா’ பற்றி சொல்லப்போகிறேன். அவள் நன்றாக விளையாடுவாள். அவளுக்குப் பிரின்சஸ் விளையாட்டுப் பொருட்கள் மிகவும் பிடிக்கும். இப்பொழுது அவளைப் பற்றி நல்ல விஷயங்கள் சொல்லப் போகிறேன். அவள், அம்மா அப்பா என்னுடன் பகிர்ந்து விளையாடுவாள். அவள் பெற்றோர் பேச்சைக் கேட்டு நடப்பாள். நான் வீட்டுப்பாடம் செய்யும் பொழுது அவளும் என்னுடன் வீட்டுப்பாடம் செய்வாள். அவளுக்கு என்னுடன் சேர்ந்து மிதி வண்டி ஓட்ட பிடிக்கும்.

**ப்ரிஷன் ராகவேந்தர் ஷங்கர்**



# என் தங்கை அனுஷயா

என் உள்ளம் தொட்ட உறவுகளில் ஒன்று "என் தங்கை அனுஷயா"! நாங்கள் இருவரும் பலூன்களை பறக்கவிட்டு அவைகளைப் பிடித்து விளையாடும் பொழுது என் தங்கை மட்டற்ற மகிழ்ச்சி அடைவாள்! அவள் பலூன்களைப் பிடிக்க ஏதுவாக நானும் விட்டுக்கொடுத்து விளையாடுவேன். அதேபோல் எங்கள் வீட்டிற்கு வரும் உறவினர்கள் மற்றும் நண்பர்களிடமும் வீட்டிலுள்ள பொம்மைகளை அவர்களுடன் பகிர்ந்து விளையாட எங்களுக்கு மிகவும் பிடிக்கும். ஆகவே, நாம் அனைவரும் சேர்ந்தும், பகிர்ந்தும் மற்றும் ஒற்றுமையுடனும் வாழ்ந்தால் நன்மைகள் பல என்பது திண்ணம்! நன்றி! அன்புடன்!!

**அக் ஷயா பூபதி**




என் பாட்டிக்கும் எனக்கும் பல விஷயங்களில் ஒற்றுமை உண்டு. அதனால் நான் அவரைப் பற்றி எழுத விரும்புகிறேன்.

எங்கள் இரண்டு பேருக்குமே இசையில் மிகுந்த ஆர்வம். என்னுடைய முதல் பாட்டு டீச்சர் என் பாட்டி தான். அதே போல் விஞ்ஞானம் மற்றும் கணிதத்திலும் மிகுந்த ஆர்வம் உண்டு. எனக்கு தமிழ் மொழி கற்றுக் கொள்ள மிகவும் உதவுவார்கள். கோவிட் 19 தொற்று நோய் காரணமாக விடுமுறைக்கு இந்தியாவிற்கு சென்று வர முடியவில்லை. ஆதலால் நாங்கள் இருவரும் ஒவ்வொரு வார இறுதியிலும் அவ்வாரத்தில் நடந்த விஷயங்களை மகிழ்ச்சியாக பகிர்ந்து கொள்வோம். நான் கற்கும் பாடங்களில் உள்ள சந்தேகங்களை சொல்லித்தர எப்பொழுதும் ஆர்வமாக இருப்பார்கள். நல்ல கதைகள் மற்றும் ஸ்லோகங்கள் மூலம் எனக்கு நல்லதை நிறைய சொல்லித்தருவார்கள். இந்த 2021 ஆம் ஆண்டு விடுமுறையில் இந்தியா சென்று அவர்களைப் பார்த்துவிட்டு வரமுடியும் என்று நினைக்கிறேன். என்னுடைய உள்ளம் தொட்ட உறவான எனது பாட்டியை எனக்கு மிகவும் பிடிக்கும். நன்றி!

**ஆர்யா அபிநவசுந்தர்**

# என் பாட்டா!

என் பாட்டா ஆசிரியராக இருந்தார்.

அவருக்கு சைக்கிள் பயணம் செய்வது மிகவும் பிடிக்கும்.

வயலுக்கு சென்று விவசாயம் செய்வதும் பிடிக்கும்.

இனிப்பு பலகாரங்களை விரும்பி உண்பார்.

அனைவரையும் அன்பாக பார்த்து கொள்வார்.



**அனுத்ரிஹா முருகானந்தம்**

# என் பெற்றோர்



நான் என் பெற்றோரை விரும்புகிறேன் ஏனென்றால் அவர்கள் எனக்காக நிறைய தியாகம் செய்கிறார்கள், என்னை சகித்துக் கொள் கிறார்கள், எப்போதும் என்னை மகிழ்விக்க முயற்சி செய்கிறார் கள். உதாரணமாக, நான் சிறு குழந்தையாக இருந்தபோது பீட்சாவின் சீஸ் சாப்பிடுவதை மிகவும் விரும்வுவேன். இதை அறிந்த என் பெற்றோர் எப்போதுமே பீட்சாவில் உள்ள தங்கள் சீஸை எனக்கு கொடுத்து சாப்பிடுவார்கள். எனக்கு கோபம் வரும் போது அவர்கள் அதை பொறுத்துக் கொள்வார்கள். நான் அவர்களை நேசிக்கிறேன், ஏனென்றால் நான் வி ரும்பும் விஷயங்களை அவர்கள் ஒருபோதும் நிராகரிப்பது இல்லை. உதாரணமாக நான் ஒரு புத்தகத்தை நீண்ட காலமாக விரும்பினேன், ஒரு நாள் இன்ப அதிர்ச்சியாக என் பெற்றோர் அதை எனக்குக் வாங்கி கொடுத்தார்கள்.

**அவனித் குமார்**

# அம்மா

1. என் அம்மாவை எனக்கு மிகவும் பிடிக்கும்.
2. அவர் மிகவும் அன்பானவர், பாசமானவர்.
3. நான் கூறும் கதைகளைக் கேட்டு பாராட்டுவார்
4. என்னை எப்பொழுதும் சந்தோசமாகவும், ஆரோக்கியத்துடனும் இருக்கும்படி பார்த்துக்கொள்வார்.
5. எனக்கு நல்ல பழக்கவழக்கங்களையும், நல்ல னக்கு படிப்பு, பாட்டு, ஓவியம் மற்றும் நடனம் போன்ற கலைகளைச் சொல்லிக்கொடுத்து ஊக்குவிப்பார்.
7. எனக்கு பிடித்த உணவுகளை சமைத்துக் கொடுப்பார்.
8. நானும், அம்மாவும் ஒன்றாக விளையாடுவது பிடிக்கும்.
9. எனக்கு கிடைத்த அம்மா, உலகிலேயே சிறந்த அம்மாவாக கருதுகிறேன்



**கிருத்யா கருணாகரன்**

# நிறைய கதைகள் சொல்லும் என் பாட்டி



எனக்கு மிகவும் பிடித்தவர் என் பாட்டி திருமதி. மாயேஸ்வரி. என் சிறுவயதில் எனக்கு நிறைய கதைகள் சொல்வார்கள். என் தங்கை மிரேயா பிறந்த பொழுது அமெரிக்காவிற்கு வந்து எங்களோடு இரண்டு வருடங்கள் இருந்து அவளை பார்த்துக்கொண்டார்கள். அப்போது தினமும் இரவில் எனக்கு இராமாயணம், மகாபாரதம் மற்றும் பல கதைகள் சொல்வார்கள். அவர் சுவாரஸ்யமாக கதை சொல்லும் விதத்தால் எனக்கு அந்த கதைகள் அனைத்தும் பசுமரத்தாணி போல் மனதில் பதிந்துள்ளது. அது மட்டும் இல்லாமல் தினமும் நான் பள்ளியில் இருந்து வீடு திரும்பும் போது எனக்காக ஏதாவது சிற்றுண்டி வகைகள் சமைத்து வைத்து காத்திருப்பார். என் பாட்டி மிகவும் நல்லவர்! அவருடைய கனிவான குணத்தினால் பல பேருக்கு உதாரணமாக இருக்கிறார். மாநிலத்தின் முதல் பெண் வக்கீல், புலவர் என்றும் பற்பல சாதனைகள் புரிந்திருந்தாலும் அவர் தன்னடக்கத்துடன் எல்லோரிடமும் பழகுவார். அவருடைய தன்னம்பிக்கையும் மனதைரியமும் எனக்கு ஆச்சரியமளிக்கும். ஒரு வருடத்திற்கு முன்பு அவருக்கு உடல் நலம் சரியில்லாமல் போனாலும் அவரின் மன உறுதியினால் விரைவில் குணமடைந்தார். அவர் அருகில் இருக்க முடியவில்லை என்பது எனக்கு கவலையளித்தது.

**ஆதிஷ் ஸ்ரீகாந்த்**

# என் அம்மம்மா



புட்டு புட்டு
குழலு புட்டு
வெள்ளை புட்டு
நல்ல புட்டு
தேங்காய் புட்டு
யாரு செய்த புட்டு

என்று புட்டு ஊட்டும் போது பாடுவாங்க. எனக்கு கதை சொல்லுவாங்க. என்னை ஆட்டோவில் கூட்டிகிட்டு போவாங்க. என் அம்மம்மா என் நெஞ்சம் தொட்ட உறவு.

**ஜேசு ஸ்டீவ்**



# என் சித்தப்பா

எனக்கு என் சித்தப்பாவை மிகவும் பிடிக்கும். அவர் பெயர் செந்தில் குமார் தாஸ். அவர் செல்லப் பெயர் ஸ்கட். அவர் வீடு பெங்களூர், இந்தியாவில் இருக்கிறது. அவர் ஒரு கட்டிட வடிவமைப்பாளர்.

என் சித்தப்பா நகைச்சுவை தன்மையுடன் பேசுவார். அவர் நிறைய ஓவியங்கள் வரைவார். அவர் வரையும் ஓவியங்கள் எனக்கு ரொம்ப பிடிக்கும். நானும் ஒரு ஓவியர். அவர் எனக்கு ஒரு முன்மாதிரி.

**சிவானி முருகன்**



# என் அம்மா

எனக்கு மிகவும் பிடித்த நபர் என் அம்மா. என் அம்மா எனக்கு சுவையான உணவுகளை சமைத்து தருவார்கள். என் அம்மா எனக்கு தமிழ் கற்றுக்கொடுப்பார்கள். என் அம்மா மிகவும் திறமையானவர். என் அம்மா மிகவும் அக்கறையுள்ளவர்.

**தனையா ஆனந்த க்ரிஷ்ணடு**



# அம்மா

என் உள்ளம் தொட்ட உறவு என் அம்மா. என் அம்மா சுவையாக சமைப்பார்கள். என் அம்மா வீட்டுப்பாடத்திற்கு உதவி செய்வார்கள். என் அம்மா என்னுடன் விளையாடுவார்கள்.

**ஸ்ரீபாலாஜி**



# என் தங்கை

எனக்கு மிகவும் பிடித்த ஒரு உறவு என் தங்கை. அவள் பெயர் அக்ஷரா. அவளுடைய வயது நான்கு. அவள் மிகவும் அன்பானவள். அவள் மிகவும் குறும்பானவள். எனக்கு அவளுடன் விளையாடுவது மிகவும் பிடிக்கும். நாங்கள் இருவரும் தினமும் ஒன்றாக சாப்பிடுவோம். நான் அவளுக்கு சாப்பாடு ஊட்டி விடுவது அவளுக்கு மிகவும் பிடிக்கும். அவள் என் தங்கையாக மட்டுமில்லாமல் பல தருணங்களில் என் தோழியாகவும் இருப்பாள்.

**பவேஷ் வைத்யா கிருஷ்ணமூர்த்தி சந்திரசேகரன்**



# என் அம்மா

என் உள்ளம் தொட்ட உறவு என் அம்மா. அவர்கள் எனக்கு நிறைய நம்பிக்கை கொடுப்பார்கள். அவர்களுக்கு என்னை ரொம்ப பிடிக்கும். அவர்கள் எனக்கு பிடித்த உணவுகளை சமைத்து கொடுப்பார்கள். அவர்கள் என் மேல் நிறைய அன்பு காட்டுவார்கள்.

**ப்ரதிக்ஷா கோகுல் ராஜசூர்ய**



# என் தங்கை


எனக்கு மிகவும் பிடித்த உறவு என் தங்கை ஆதிரை. அவளுக்கு வயது நான்கு. அவள் மிகவும் சுட்டிப்பெண். சுறுசுறுப்பாக விளையாடிக்கொண்டிருப்பாள். அவள் நன்றாக பாடுவாள். என்னுடன் அதிகமாக சண்டை போடுவாள் ஆனாலும் பாசமாக இருப்பாள். இருவரும் சேர்ந்து விளையாடுவோம். நாங்கள் இருவரும் தாத்தா பாட்டிக்கு செல்லம்.

**மதுஷினி சதிஷ்குமார்**



# அமெரிக்கக் காற்பந்தாட்டம்

**– ஹ்ருதய் வி. சுஸ்வரம்**



எனக்குப் பிடித்த விளையாட்டு அமெரிக்கக் காற்பந்தாட்டம். இந்த விளையாட்டை இரண்டு அணிகளாக விளையாடுவார்கள். ஒவ்வொரு அணியிலும் பதினொன்று விளையாட்டு வீரர்கள் மைதானத்தில் இருப்பார்கள். இந்த விளையாட்டுடைய குறிக்கோள் என்னவென்றால் உன்னுடைய அணி எதிர் அணியை விட அதிகமாக புள்ளிகள் வாங்க வேண்டும். இதற்கு டச்டௌன்களும் (touch down), மைதான கோல்களும் (field goals) பெற வேண்டும். அமெரிக்க காற்பந்து நம்முடைய கண் வடிவத்தில் இருக்கும். அது தோலால் செய்யப்பட்டது.

ஒரு அணியில் உள்ள வீரர்கள் பல வகையில் இருப்பார்கள். ஒவ்வொரு அணியிலும் ஒரு குவாட்டர்பாக் (quarterback) இருப்பார். அவர் தன்னுடைய அணியில் உள்ள மற்றவர்களுக்கு பந்தை பாஸ் பண்ணுவார். ரன்னிங் பாக் (runningback) என்ற வீரர் பந்தைப் பிடித்துக் கொண்டு எண்டு ஜோன் (end zone) என்ற மைதானத்தின் இறுதிக் கோட்டை நோக்கி ஓடுவார். வைட் ரிசீவர்கள் (wide receivers) பந்தை பிடிப்பார்கள். எதிர் அணி வீரர்கள் இவர்களை எண்டு ஜோன் போகவிடாமல் தடுக்க முயற்சி செய்வார்கள். ஆட்டம் மிக சுவாரசியமாக இருக்கும்.

அமெரிக்காவில் ஒரு மிக பெரிய காற்பந்தாட்ட கூட்டமைப்பு இருக்கிறது. அதன் பெயர் "தேசிய காற்பந்தாட்ட கூட்டமைப்பு" (NFL). இதில் AFC, NFC என்று இரண்டு கான்பிரன்சுகள் உள்ளன. அவை ஒவ்வொன்றிலும் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று நான்கு பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் நான்கு அணிகள் உள்ளன. சில பிரபலமான அணிகள்: பேட்ரியட்ஸ் (patriots), கௌ-பாய்ஸ் (cowboys), பாக்கர்ஸ் (packers), சீஃப்ஸ் (chiefs), கடல்கழுகுகள் (sea hawks) மற்றும் ஸ்டீலர்ஸ் (steelers).

ஒரு விளையாட்டை நான்கு கால் மணிநேர பிரிவுகளாக விளையாடுவார்கள். ஒரு NFL பருவத்தில் ஒவ்வொரு அணியும் 16 அணிகளை எதிர்த்து விளையாடுவார்கள். எட்டு விளையாட்டுகள் அவர்களுடைய சொந்த ஊரில் நடக்கும். மீதி எட்டை எதிர் அணியின் ஊருக்கு போய் விளையாடுவார்கள். NFL பருவம் முடியும் பொது 32 அணிகளில் இருந்து 14 அணிகள் பிலே-ஆஃப்க்கு (playoffs) முன்னேறுவார்கள். அப்போது தோற்கும் அணி அதற்கு பிறகு விளையாட முடியாது.

NFL பருவத்தின் கடைசி விளையாட்டின் பெயர் சூப்பர் பௌல் (super bowl). அந்த பருவத்தின் இரண்டு மிகச்சிறந்த அணிகள் மோதுவார்கள். ஒவ்வொரு ஆண்டும் மக்கள் இந்த நிகழ்ச்சியை ஒரு திருவிழா போல் கொண்டாடி பார்ப்பார்கள். சூப்பர் பௌல் பெப்ரவரி மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை நடக்கும். அன்று அமெரிக்கா முழுவதும் நாசோஸ், பீட்ஸா, கோழி இறக்கை மற்றும் பர்கர்கள் நிறைய விற்பனை ஆகும்.

எனக்கு மிகவும் பிடித்த அணி பால்டிமோர் ரேவன்ஸ் (Baltimore ravens). செயின்ட் லூயிசில் முதலில் ஒரு அணி இருந்தது. அதன் பெயர் ராம்ஸ் (Rams). ஆனால் 2016இல் அந்த அணியினர் லாஸ் ஏஞ்சல்ஸ்கு போய்விட்டனர்.

2021இல் சூப்பர் பௌல் டாம்பா பே (Tampa bay) என்ற நகரத்தில் நடக்கப் போகிறது. அதைப் பார்த்து மகிழ நான் தயாராக இருக்கிறேன்.



# பயன்தரும் பாரம்பரிய விளையாட்டா? பயம்தரும் தற்கால விளையாட்டா?



மெர்சி பிரியா
இராபர்ட் ராஜகுமார்

"ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா" என தம்பி, பாப்பா பருவத்திலேயே விளையாட்டின் அவசியத்தை உணர்த்தியவர் முண்டாசுக்கவிஞர் மகாகவி பாரதியார். ஆம், மனிதன் மனிதனாக மனிதநேயத்துடன் வாழ விளையாட்டு மிகவும் அவசியம்.

நம் உடலுறுப்புகள் விளையாட்டின் மூலம் புத்துணர்ச்சிப்பெற்று புதுப்பொலிவுடன் திகழ்கின்றன. எனவேதான் நம் முன்னோர்கள் விளையாட்டினை பருவத்திற்க்கேற்பவும், இருபாலினத்தவர்களுக்கும் என வகைப்படுத்தியிருந்தார்கள், மழலையில் தொடங்கி, மரணிக்கும்வரை விளையாட்டுகள் வகைப்படுத்தப்பட்டன;

மழலை விளையாட்டு, இளமை விளையாட்டு, பகுத்தறிய விளையாட்டு, பண்பாட்டு விளையாட்டு, வீரத்தின் விளையாட்டு, மணமகளாக விளையாட்டு, மணமேடையில் விளையாட்டு, பெற்றோருடன் விளையாட்டு, உற்றார் உறவினர்களுடன் விளையாட்டு, நண்பர்களுடன் விளையாட்டு என அனைவரையும் ஒன்றிணைக்கும் ஒரு கருவியாக விளையாட்டு திகழ்கிறது.

விளையாட்டின் மூலம் இறுகிய மனம்கூட இலகுவாக மாறி மகிழ்கின்றது. மகிழ்ச்சியுடன் தொடங்குகிற காரியத்திலே மனம் ஒன்றிணைந்து வாழ்வின் பிரச்னைகளை மறந்து மகிழத் தொடங்குகிறது. ஆயிரம் கவலைகள் - பிரச்சனைகள் சூழ்ந்த மனதினை சற்று ஆசுவாசப்படுத்தி ஆனந்தமயமாக்கும் போது பொருள் செலவில்லாமலே பொழுது போவதுடன் ஒருவருக்கொருவர் புரிந்துகொள்ள முடிகிறது.

இருக்கும் இடத்தில் எடுத்து இல்லாத இடத்தில் கொடுக்கும் குணம் வளர "பல்லாங்குழி". ஏற்றம் இரக்கம் இரண்டும் இருப்பதே வாழ்க்கை என்பதை உணர்த்த "பரமபதம்". கூட்டல் - பெருக்கல் கணக்கை களிப்புடன் மகிழ்ந்து கற்க "கில்லி". வெட்டி



வெளியே எரிந்தாலும் மீண்டும் முயன்று தொடர்ந்து முன்னேற "தாயம்". இதறவழி இல்லாதபோதும் இறுதிவரை போராடும் உறுதியான மனம்பெற "சதுரங்கம்". சமமாக இல்லாதபோதும் சாதிக்கத்தூண்டும் சக்தியைப்பெற "நொண்டி". ஒளிந்திருப்பவர்களை கண்டு பிடிப்பதற்கான பொறுமையும், நிதானமும்பெற "கண்ணாம்பூச்சி". ஒரு சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பதைப் போலத்தான் இந்த விளையாட்டுப் பட்டியலும். விளையாட்டு வினையாகிப் போய்விடக் கூடாது என நம் முன்னோர்கள் எச்சரிக்கை யுடன் வகைப்படுத்தியிருந்தார்கள். ஆனால் இன்று, மைதானங்களில் நடைபெற்றுவந்த விளையாட்டுகள் நவீன கைப்பேசிகளில் அடக்கப்பட்டு விட்டன; இல்லை, இல்லை அடக்கம் செய்யப்பட்டுவிட்டன. கைபேசிகள் மூலம் விளையாடப்படும் பல விளையாட்டுக்கள் பலரின் உயிருக்கு உலை வைத்துக்கொண்டுதானே உள்ளது? இதன் மூலம் பலர் தங்களது வாழ்வைத் தொலைத்துக் கொள்வது அன்றாடம் தொலைக்காட்சி செய்தியாக மாறிவிட்டது.

விளையாட்டை மையப்படுத்தி இன்று நடைபெற்றுவரும் சூதாட்டங்கள் கணக்கிலடங்காதவை. கொரோனாவைவிட வீரியமிக்க கொடிய சூதாட்டம்தான் ஆன்லைன் ரம்மி. இன்று உலகம் முழுவதும் பலரது குடும்பங்கள் சின்னா பின்னமாகிப் போகவும், உயிர்ப்பலிகள் தொடர்வதற்கும் இவ்விளையாட்டு தான் காரணம். தடை செய்யப்பட்ட விளையாட்டு என கூறுகிறார்கள், ஆனால் உயிர்ப்பலிகள் தொடர்கதைதான்..... அப்படி யென்றால்?

இதுபோன்ற நிகழ்வுகள் நடப்பதற்கு காரணம் யார்? வெட்கப்படாமல், மார்தட்டிச் சொல்லலாம், நான் - நாம் - நாங்கள் என்று! பாரம்பரியத்தை புறக்கணித்தோம், பரம்பரை பரம்பரையாக வந்த பல மதிநுட்பமிக்க விளையாட்டுகளை புறக்கணித்தோம், முன்னோர்களின் கருத்துக்களைப் புறக்கணித்தோம், கடைசியில் ஆற்றல் மிக்க பொக்கிசமான முதியோர்களையும் புறக்கணித்தோம் அதன் விளைவுகளை விழி பிதுங்க தூக்கி சுமக்கிறோம், இதிலிருந்து எப்படி மீள்வது? இந்த கேள்விக்குறிய பதில் அவரவர்களின் சிந்திக்கும் திறனைப் பொருத்தே உள்ளது.

மனம் மாறி நம் பாரம்பரியத்தை நோக்கிப் பயணப்படுவோம், வாழ்க நம் பாரம்பரியத்தின் நிலைப்பாடுகள், வளர்க நம் பாட்டன் - பூட்டன் என்ற ரத்த சொந்தங்கள் நமக்காக விட்டுச்சென்ற அப்பழுக்கற்ற தூய்மையான விளையாட்டுகளும், அதைச்சார்ந்த நெறிமுறைகளும்.

## சுஜய் சுரேஷ்குமார்



## சோபியா ஜோசப்





# நிலை 2 ஓவியங்கள்
# வியக்க வைக்கும் விண்வெளி







அபினவ் சுந்தர்



இயலினி சாமிநாதன்




லெவின் ப்ரவீன்




நவ்நீத் ஜானகிராமன்





பிரித்திகா சம்பத்



அக்ஷரா செந்தில்குமார்



அபிநவ் சுவாமிநாதன் தீபக்



உபாசனா விஜய்குமார்



சஞ்சன் பூர்ணமன் காந்தி






சிரேஷ்தி சிவசண்முகம்





சுவாதி கார்த்திகேயன்







தவனேஷ் பார்த்தசாரதி







நித்ரா கருணாகரன்





பெரோனியா இராபர்ட் ராஜகுமார்





முகமது வசீம் காதர் பாஷா



லிதிக்ஷா புவியரசு



வருணிகா அருண் கார்த்திக்

# கடல்

ரம்யா ஜானகிராம்



வானத்தின் கண்ணாடியாய் வர்ணஜாலத்துடன் நீ
வசியம் செய்து எனை ஈர்க்க
மணல் முட்டி மன்றாடித் தடுத்தும்
மெல்ல மெல்ல உன்னை வந்தடைகிறேன்!

சில்லென்று நீரிரைத்து விளையாட்டாய் நீயணைக்க
கடற்பாசி கால்களை இறுக்கி பிணிக்க
நான் என்பதும் மறந்து
காதலால் கட்டுண்டு கைதியாய் நிற்கிறேன்!

“இன்று தோற்பதில்லை” என்ற எண்ணத்தை தூளாக்கி
பேரலையால் எனை வீழ்த்தி
துள்ளும் மீன்களோடு எள்ளி நீ நகைக்க
சிலந்தி வலையில் இரையாய் சிலிர்க்கிறேன்!

சுடுமென தெரிந்தும் தீயைத் தீண்டும் ஆவலோடு
கரிக்கும் நீர் பார்வை பறிக்க
உயிர்பயத்தை ஊட்டும் வல்லூறு ஓலமிட
தொடுவானம் தொட்டுவிட தள்ளாடி விரைகிறேன்!

திகில் காட்சிக்கு சாட்சியாகாமல் கதிரவனும்
திடீரென மேற்குள் மறைய விரைய, என்
சித்தம் நிறைத்த பித்தம் தெளிந்து
செந்நிறமானது என் முகமும் வானமும் !

சங்கொலி முழங்க, நிலவொளியில் அலைகள் நடனமிட
“இன்று போய் நாளை வா” என
கருணையோடு கரை சேர்க்கிறாய்
களைப்பில் நான், வெற்றிக்களிப்பில் நீ!

நுரையால் சலவையாகி என் கவலைகள் கரைய
புதிதாய் பிறந்த பரவசத்துடன்
பிரியா விடைபெற்றுத் திரும்புகிறேன்
பாலையின் தனிமையில் மீண்டும் நான்



# போய் விடு கொரோனா போய்விடு!!!

–அருணா மருதமலை

தந்தை முகம் பார்த்திட
தாய் மடியில் சாய்ந்திட
தாத்தா ஆசிர்வாதம் பெற்றிட
பாட்டி நெஞ்சம் நெகிழ்ந்திட
மாமாவிடம் வம்பிட
அத்தை சமையல் சுவைத்திட
அண்ணனின் ஆறுதல் கேட்டிட
தம்பி வளர்ந்ததை உணர்ந்திட
அக்காவுடன் அரட்டையிட
தங்கையுடன் சண்டையிட

பிரிந்த சொந்தத்தை இணைந்திட
உடைந்த இதயத்தை இணைத்திட
தொலைந்த நட்பை புதுப்பிட



படித்த பள்ளியை வணங்கிட
கல்லூரியைக் கண்டு கர்வப்பட

ஞாபகங்கள் உயிர்த்திட
அழியா ஞாபகங்களை உருவாக்கிட
நான் சென்று வர வழி விடு
மன்னித்து மறைந்திடு...
போய் விடு கொரோனா போய் விடு!!



# சொர்க்கமே என்றாலும்

## எழிலரசி ஆறுமுகம்

தமிழ்நாட்ல இருக்க ஒரு அழகான கிராமத்தை சொல்லனும்னா பாரதிராஜா படத்துல வர மாதிரி ஒரு கிராமம்னு சொல்வாங்க. ஆனா பாரதிராஜா படத்துலயே வந்த அழகான கிராமம் தாங்க எங்க ஊரு. மூணு பக்கமும் மேற்கு தொடர்ச்சி மலை அதோட அடிவாரத்துல இருக்க அழகு ஊருங்க. ஊருக்குள்ள நுழையும் போதே முகத்துல வந்து சில்லுனு மோதற காத்துல இருக்குங்க ரொம்ப நாள் கழிச்சு பிள்ளையை பாக்குற தாயோட அரவணைப்புல இருக்க வாஞ்சை.



ஊருக்குள்ள நுழைஞ்ச உடனே இருக்க எல்லை கருப்பன சாமி தாங்க எங்க ஊரையே காவல் காக்கற தெய்வம். ஊரு சனம் அத்தனையும் கட்டுப்படற காவல் தெய்வம். அவரு மேல இருக்க பயத்துல தாங்க எங்க ஊருக்குள்ள இன்னும் போலீஸ் வர வேண்டிய தேவையே இருந்தது இல்லங்க. அவரு கோவிலை அடுத்து ஐவர் மலைனு ஒரு சின்ன கரடு. பாண்டவர் வன வாசம் வந்தப்போ தங்கினதால அந்த கரட்டுக்கு ஐவர் மலைனு பேருனும் , பழனில இருக்க நவபாஷாண முருகன் சிலையையே போகர் இந்த மலைல உக்காந்து தான் செஞ்சாருனும் ஏகப்பட்ட செவி வழி கதை இருக்கு அந்த கரட்டுக்கு. ஆனா மலைக்குள்ள இருக்க குகையை கூர்ந்து பாத்தா உள்ள தெரியற கல்வெட்டுகளையும், சிற்பங்களையும் பாத்தா அந்த மலை கண்டிப்பா சமணர் படுகையா இருந்துருக்கும்னு விஷயம் தெரிஞ்சவங்க கண்டுக்குவாங்க.

கரட்டை தாண்டி உள்ள வந்தா ஊருக்குள்ள மொத்தமே நாலு தெரு , ஊருக்கு நடுவுல ஊர் தெய்வமான காளியம்மன் கோயில் அப்புறம் கண்ணுக்கு எட்டின வரைக்கும் பச்ச பசேல்னு வயல்களும் , தோப்புகளும் அதுக்கப்புறம் மலை அடிவாரத்துல ஒரு சின்ன அணைக்கட்டுன்னு அம்புட்டு அழகான ஊருங்க. ஊரு மட்டுமா அழகு? எங்க மக்க மனசு அதை விட அழகுங்க. எங்க ஊரு ஆளுங்க பேச்சுல கொங்கு தமிழ்ல இருக்க மரியாதையும் இருக்கும், மதுரை தமிழ்ல இருக்க பாசமும் இருக்குங்க. பஞ்சம், வறட்சினு ஏதேதோ காரணத்துனால தமிழ்நாட்டுல பெரும்பாலான விளை நிலம் எல்லாமும் டெர்ரஸ் கட்டிடடங்களா ஆயிட்ட போதும் எங்க மக்க மாறலையே. விவசாயத்தையும் விளை நிலத்தையும் உசுரா பாக்கற உசந்தவங்க நிறைஞ்ச ஊருங்க.

படிப்பு, வேலைனு வெளியூர்,வெளிநாடுனு போய்ட்டா கூட எங்க ஊரு புள்ளைங்க வருசா வருசம் நடக்கற ஊரு திருவிழாக்கு வந்துருவாங்களே. 3 நாளு ஊரே சேந்து அம்மனுக்கு எடுக்கற திருவிழா ஆச்சே. ஊரு கிணத்துல ஊரு மக்க எல்லாரும் சேந்து போய் அம்மன் முகம் செஞ்சு எடுத்துட்டு வரதுல ஆரம்பிக்கற திருவிழா , மாவிளக்கு போடறது, பூச்சட்டி எடுக்கறது, தீ மிதிக்கறதுனு ரெண்டு நாளு கோலாகலமா நடந்து மூணாவது நாளு மஞ்ச தண்ணி விளையாடறதோட முடியும். ஆனா இந்த கொரோனவால போன வருஷம் எங்க ஊரு திருவிழா கூட நின்னு போச்சுதுங்களே. ஊரு திருவிழாவை சாக்கா வச்சு ஊரையும் சொந்தங்களையும் பாத்துட்டு போற நம்ம புள்ளைங்க ஊருக்கு வர முடியாம பரிதவிச்சு போய் இருக்குதுங்களே. இந்த வருஷமாவது எல்லாம் சரியாகி ஒரு எட்டு போய் எங்க ஊரையும் ஊரு சனத்தையும் ஒரு பார்வை பாத்துட்டு வந்துற மாட்டமான்னு வேண்டிக்கிட்டு கெடக்கோம். அது வரைக்கும் எங்க இருந்தாலும் மனசு நெறய ஏக்கத்தோட

“சொர்க்கமே என்றாலும் அது எங்க ஊர போல வருமா”ன்னு பாடிகிட்டு கெடப்போம்ல.






## அவ்யுக்த் ரகுராமன்,
## நிலை 6

"தேமதுர தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்" எனப் பாடிய மகாகவி பாரதி கனவு நினைவாகி கொண்டிருக்கிறது.

தமிழ் நாட்டில் வளரும் குழந்தைகள் மட்டுமின்றி, பிற மாநிலங்களிலும் மற்றும் வெளி நாட்டிலும் வளரும் நம் குழந்தைகள், தமிழ் மொழி மட்டும் அல்ல, மொழியின் அடிப்படையில் உருவான பண்பாடு, இசை, பழக்க வழக்கம் கற்றுக்கொள்ள தமிழ் அமைப்புக்கள் உருவாகி உள்ளன.

- அமெரிக்காவில் "அமெரிக்கா தமிழ் அகாடமி", கனடாவில் "கனடா தமிழ் அகாடமி" மற்றும் பல நாடுகளிலும் தமிழ் வளர் மன்றங்களும், சங்கங்களும் அமைக்கப்பட்டு தமிழ் மொழியையும், பண்பாடையும் மக்களுக்குக் கொண்டு செல்கின்றன.
- உலகத் தமிழ் சங்கம், உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம், தமிழ் பல்கலை கழகம், செம்மொழித்தமிழாய்வு நிறுவனம் ஆகிய அமைப்புகள் தமிழ் மொழி மேம்பாட்டுக்காக செயல்பட்டு வருகின்றன.
- சிங்கப்பூரிலும் , இலங்கையிலும் தமிழ் மொழி ஒரு ஆட்சி மொழியாகவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரில் தமிழ் மொழி இரண்டாம் மொழியாக கற்பிக்கப்படுகிறது.
- உலகப் பொதுமறை என கருதப்படும் "திருக்குறள்" நாற்பது இந்திய மற்றும் இந்தியரல்லாத மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இது மிகவும் மொழிபெயர்க்கப்பட்ட பண்டைய படைப்புகளில் ஒன்றாகும்.
- திரு .சுந்தர் பிச்சை, திருமதி.இந்திரா நூயி போன்றவர்கள் நம் தமிழ் நாட்டுக்கும், மொழிக்கும் பெருமை சேர்க்கின்றனர்.
- ஏ.ஆர்.ரஹ்மான் போன்ற இசை இயக்குனர்கள் தனது இசை மற்றும் பாடல்கள் மூலம் தமிழ் இசையை உலகம் முழுவதும் பரப்பி வருகின்றனர்.
- உலகளவில் தொலைக்காட்சி, கணினி, செய்தித்தாள்கள், தமிழ் நூல்கள் போன்ற பல தகவல் தொடர்பு ஊடகங்கள் மூலமாகவும் தமிழ் மொழிக்கல்வியும், செய்திகளும், கலை நிகழ்ச்சிகளும் பரப்பப்பட்டு வருகின்றன.
- தமிழகத்திலிருந்து கலைக்குழுக்களும், இசைக்கலைஞர்களும், நடன கலைஞர்களும் பல்வேறு நாடுகளுக்கு சென்று நிகழ்ச்சிகள் நடத்தி நமது பண்பாட்டு தொடர்பை வளர்க்கின்றனர்.
- சிங்கப்பூர், மலேஷியா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் தமிழர்கள் அமைச்சர்களாகவும், நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் பணியாற்றி நம் மொழிக்கும், மண்ணுக்கும் பெருமை சேர்க்கின்றனர்.

இந்தியாவுக்கு வெளியே வாழும் எங்களைப் போன்ற மாணவர்கள் நமது தமிழ் மொழியையும் மரபுகளையும் தலைமுறைகளாக எடுத்துச் செல்வதை ஒரு பொறுப்பாக கருத வேண்டும்.

தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா !!!

## சஞ்சனா திரவியம்
## நிலை 6



தமிழ்நாட்டில் மட்டுமே இருந்த தமிழும், தமிழர்களும் உலக நாடுகள் அனைத்திற்கும் வேலைக்காக செல்ல ஆரம்பித்தவுடனே எட்டுத் திக்கும் தமிழ் பரவத் தொடங்கிவிட்டது.

தமிழர்கள் தாங்கள் வாழும் அனைத்து உலக நாடுகளிலும் தமிழ்ப் பள்ளிகளையும், சங்கங்களையும் ஆரம்பித்து விட்டனர். அவையெல்லாம் அனைவரும் ஒன்றுகூடி தமிழ் வளர்க்கும் இடங்களாக இருக்கின்றன.

வெளிநாடுகளில் பிறந்தாலும், எல்லா குழந்தைகளும் தமிழ்ப் பள்ளிகளில் படித்து ஆர்வமுடன் தமிழில் எழுதவும், பேசவும் கற்றுக் கொள்கின்றனர்.

பெற்றோர்களும் தன்னார்வ ஆசிரியர்களாகவும், பொறுப்பாளர்களாகவும் இருந்து தமிழை கற்றுக் கொடுக்கவும், தமிழ் பரவவும் உதவுகின்றனர்.


இதுபோல தமிழ் உலகம் முழுவதும் பரவி வளர்ந்து வருகிறது.

## மிரிதினி, நிலை 6



தமிழ் மொழி 5000 ஆண்டுகள் பழமையான மொழி. இதை இன்றளவும் தமிழர்கள் போற்றி வளர்த்து வருகிறார்கள். நம் முன்னோர்கள் தமிழை தங்கள் குழந்தைகளுக்கும் மற்றும் சுற்றத்தாருக்கும் கற்றுக்கொடுத்தனர். அதை தமிழர்கள் அனைவரும் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம். இதன் மூலமாக அடுத்த தலைமுறைக்கும் சென்றடைகிறது. தமிழ் கவிஞர்கள் மற்றும் எழுத்தாளர்கள் எழுதிய தமிழ் புத்தகங்கள் உலகம் முழுவதும் விற்பனை செய்யப்படுகின்றன. தமிழ் நூல்கள் மற்றும் இலக்கியங்கள் வலைத்தளங்கள் மற்றும் பல ஆன்லைன் பயன்பாடுகள் மூலம் கிடைக்கப் பெறுவதால், உலகம் முழுவதும் எளிதாக அனைவரையும் சென்றடைகிறது. தமிழைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள், பல்வேறு நாடுகளுக்குப் புலம் பெயரும்பொழுது, தமிழ் மொழியை தமிழ் சங்கம், தமிழ்ப்பள்ளி மற்றும் இயல் இசை மூலமாகத் தமிழ் மொழி அந்த நாட்டு மக்களுக்கு அறியப்படுத்துவதால், தமிழ் மொழி அனைவரும் அறியும்படியாக பரவுகிறது. நாம் நம் தாய் மொழி தமிழை போற்றி வளர்த்தால் ,என்றென்றும் திக்கெட்டும் பரவும் தேமதுர தமிழோசை

## வைஷ்ணவி ஸ்ரீனிவாசன்





# தன்னிலிருந்து விடுபடு

## எழிலரசி செந்தாமரை



சுயநலத்தில் ஒரு விசித்திரம் இருக்கிறது ! நாம் எதை "சுயம்" என்று கருதுகிறோம் என்பதே!

"சுய"த்தின் வட்டம் தேவைக்கேற்றவாறு போல அவ்வப்போது சுருங்கும் விரியும்! தன் கணவன் / மனைவியிடம் சின்ன வாக்குவாதமேயானாலும் விட்டு கொடுக்காமல் ஏதோ நிர்மூலமாகி விடுவது போல் ஈகோ வாதிடும்! ஆனால் அதே ஈகோ குடும்பத்தாருக்காக அண்டை வீட்டாரிடம் தேசிய எல்லைகள் வரையும் !

தேவைப்படும் போது மட்டும் அந்த வட்டம் விரிந்து தன் மொழி, இனம், நாடு, கலாச்சாரம் ஒன்றுதான் உண்மை என்று தன் வட்டத்தை சுற்றி சுவர் எழுப்பும். அதெப்படி தாம் அதில் பிறந்துவிட்டதாலேயே தன்னை சார்ந்த மதம் ஒன்றுதான் தலை சிறந்ததென்று நம்புகிறது மனம்?இதெல்லாம் வெறும் ஈகோவின் அடையாளங்கள். இதை தெளிவாக பார்க்கவிடாமல் மறைக்கும் திரை "சுயநலம்"!

அந்த சுயநலம் என்ற குறுகிய வட்டத்தில் இருந்து வெளியே வந்து யோசித்தால் உலகம் எப்படி இருக்கும்?! ஒரு யோசனை!!

ஒருவேளை , லட்சியம் என்ற பேரில் தாமும் தம் குழந்தைகளின் வாழ்க்கையையும் ஒரு பந்தயமாக பார்க்காமல் நிம்மதியாக வாழலாம்!

ஒருவேளை, நிரந்திர தேவைகளால் நம்மை "நுகர்வோர் ஜாம்பிகளாக" மாற்றிவிட்ட நிறுவனங்களின் பிடியில் இருந்து தப்பித்து எளிமையின் அழகை உணரலாம் !

சில நேரம், செய்தியில் படித்த துரதிர்ஷ்ட சம்பவத்தை வெறும் நேரம் போக்க அலசாமல், மானுடத்தை தூக்கியெறியாமல் அந்த சகமனிதனின் வலியை உணரலாம்! ஒருபடி மேலே போய் இயற்கையின் வலியையும் உணரலாம், காலநிலை மாற்றங்களால் நமக்கென்ன உடனடி பாதிப்பு என்ற குறுகிய நோக்கில்லாமல், தன்னாலான மீட்டமைப்பில் ஈடுபடலாம்!

தன் சிக்கல்கள், தன் தோல்விகள், தன் வெறுப்புகள் என்ற சுயநல பிடியிலிருந்து, எப்போதுமே இல்லையென்றாலும்,அவ்வப்போதாவது தனித்து நின்று யோசித்துதான் பார்ப்போமே.தன்னலமில்லாமலும் தன் சொந்த கருத்தை திணிக்காமலும் எந்த உண்மையை உணர்ந்தாலும் அதில் மருட்சியில்லாமல் ஒரு சக்தி இருக்கிறது, அதில் ஒருவித உற்சாகமும் பிறக்கிறது! அதில் ஒருவேளை நம் தீராத மலடியான "இனப்போர்கள்" முடிந்தே போகலாம்!

இதெல்லாம் நடைமுறைக்கு சாத்தியமா? என்று கேட்கும் சிந்தனையாளர்களே , உலகம் என்ற ஒரு வட்டத்திற்குள் நாமெல்லோரும் அடங்கும்போது .. நம் "சுயநலம்" என்ற வட்டத்துக்குள் இந்த உலகம் முழுவதையுமே சேர்த்துக்கொள்ள முடியாதா என்ன?





# இருளின் ஒளி



ஆஷா ஜேசு.

என் பெயர் குழலி, என் பள்ளியிலிருந்து ஒரு அருங்காட்சியகத்திற்கு சென்றிருந்தோம். நானும் என் நண்பர்களும் ஆர்வத்துடன் அருங்காட்சியகம் உள்ளே நுழைந்தோம். பண்டைய அரசர்கள் பயன்படுத்திய வாள் கேடயம் மற்றும் பற்பல கண்காட்சிப் பொருட்கள் அங்கே இருந்தன.

நான் ஒவ்வொரு கண்காட்சிப் பொருளையும் மேலோட்டமாக பார்த்துக்குக்கொண்டே சென்றேன். பல்வேறு அரசுகளின் கொடிகள், பல்வேறு மக்களின் வாழ்க்கை முறைகள் என அனைத்தும் என்னை வியப்பில் ஆழ்த்தின. அதில் ஒரு ராணியின் புகைப்படம் மட்டும் என் கவனத்தை முழுமையாக ஈர்த்தது, அது மிகவும் கம்பீரமாகவும், எதார்த்தமாகவும் இருந்தது.

அந்த ராணியின் பெயர் வீரமங்கை வேலுநாச்சியார் என்று எழுதியிருந்தது. நான் அவள் முகத்தை உற்று நோக்கினேன், அவள் கண்கள் மிக சக்திவாய்ந்ததாக இருந்தது. அவள் ஒரு உயிருள்ள ராணியாகவே எனக்கு தோன்றிற்று. நான் வியப்பில் இருந்து மீளும் முன்னரே அவள் என்னோடு பேச தொடங்கினாள், என் பெயர் வேலுநாச்சியார், சிவகங்கை சீமையை ஆண்ட மன்னர் முத்துவடுகநாதரை என் 16ம் வயதில் மணந்து சிவகங்கை சீமையின் பட்டது ராணியானேன். மக்களின் நலனை பேணிக்காத்து நல்லாட்சி செய்து கொண்டிருந்த எங்களுக்கு ஒரு எதிர்பாராத சம்பவம் ஆங்கிலேயர்களால் நிகழ்ந்தது. கோவிலுக்கு செல்லும்போது மன்னர் ஆயுதம் இன்றி இருப்பார் என்பதை அறிந்து கொண்ட ஆங்கிலேயர்கள், மன்னர் முத்துவடுகநாதரை, திட்டமிட்டு சூழ்ச்சிசெய்து, காளையார்கோவிலில் வைத்து, துப்பாக்கியால் சுட்டு கொலை செய்தனர். கணவரையும் அரசையும் இழந்த நான் என் கைக்குழந்தையுடன் சிவகங்கையை விட்டு வெளியேறினேன்.

கணவரை கொன்றவர்களை அதே காளையார்கோவிலில் வைத்து பழிதீர்த்து சிவகங்கையையும் என் மக்களையும் மீட்டெடுப்பேன் என்று சபதம் செய்தேன். வேகத்துடன் விவேகமும் தேவை என்பதை புரிந்துகொண்டிருந்த நான், பல திட்டங்களை தீட்டினேன். சிறிது சிறிதாக படைகளை திரட்டினேன். படைகளை பல்வேறு இடங்களில் சிறு சிறு குழுக்களாக பிரித்து பயிற்சி கொடுத்தேன். பக்கத்து அரசுகளின் உதவியை நாடினேன். ஹைதர் அலி உதவியுடன் ஒரு படை, மருது சகோதரர்கள் உதவியுடன் ஒரு படை, என் மெய்க்காப்பாளர் குயிலி தலைமையில் பெண்கள் படை, சிவகங்கைக்குள்ளே இளைஞர் படை என எட்டு வருடங்களாக ஆங்கிலேயப் படைகளை எதிர்கொள்ள தயார் ஆனேன்.

சரி, இப்போது படைகள் தயார் நிலையில் உள்ளன, ஆனால் நவீன ஆயுதங்களுடன் சிவகங்கையில் படர்ந்திருக்கும் ஆங்கிலேயப் படைகளை எதிர்கொண்டு வெற்றி பெறுவது எப்படி என சிந்தித்தேன், போருக்கான வியூகங்களை தீட்டினேன். போரின்போது பொதுமக்களுக்கு எந்த வகையிலும் பாதிப்பு வரக்கூடாது என்பதிலும் உறுதியாக இருந்தேன். எனவே சிவகங்கையிலிருந்த என் மக்களை சிறிது சிறிதாக வெளியேற்றினேன், மக்கள்தொகை கணக்கு எண்ணிக்கையில் ஆங்கிலேயருக்கு எந்த சந்தேகமும் வரக்கூடாது என்பதற்காக பொதுமக்களுக்கு மாற்றாக படை வீர வீராங்கனைகளை பொதுமக்கள் போல் உள்ளேற்றினேன். சில வீர வீராங்கனைகளை விருந்தினர்களாகவும், நண்பர்களாகவும், மருத்துவர்களாகவும் உள்ளேற்றினேன். இதனால் என் மக்களும் பாதுகாப்பான இடத்திற்கு வெளியேறினர் மற்றும் படைகளும் எக்கணத்திலும் போர் புரிய தயாராக உள்ளேறின. இப்படி சிறிது சிறிதாக படைகளை ஊருக்குள் கொண்டு சேர்க்க எனக்கு ஆறு மாதங்கள் ஆயின.

இப்படி நிதானமாகவும், பதட்டமின்றியும் போர் வியூகங்களை செயல்படுத்தி, பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு, திட்டமிட்டபடி காளையார்கோவிலில் ஆங்கிலேயருக்கு எதிராக இரத்தம் சிந்தி யுத்தம் செய்து, வெற்றி கொண்டு, என் நாட்டையும், என் மக்களையும் மீட்டெடுத்தேன். என் சபதத்தையும் நிறைவேற்றினேன். இந்த வெற்றிக்கு பின்னால் பல்வேறு வீர வீராங்கனைகள் தியாகங்களும் அடக்கம்.

“வெற்றி என்பது நாம் முறையாக எடுத்துக்கொள்ளும் பயிற்சியின் பலனே, உன் வெற்றி உன் கையில்”


என்று அவள் என்னிடம் பேசி மறைந்தாள்.

இப்படி ஒரு வீரமங்கையின் வரலாற்றை அறிந்துகொள்ளாமலேயே என் 12 வருட பள்ளிப்பருவத்தை முடித்துக்கொள்கிறேனே என்ற ஏக்கத்திலும் வருத்தத்தில் விரைந்தேன் நூலகத்தை நோக்கி, அங்கும் எனக்கு காத்திருக்கும் ஏமாற்றம் என தெரியாமல்......

# நிலை 3 ஓவியங்கள்
# வியக்க வைக்கும் விண்வெளி




ஆதர்ஷ் ராம் அருண்குமார்



இனியா சரவணன்



க்ரிஷ் பிள்ளை

ரேவந்த் குமார்




ரிஷ்வந்த் ஆறுமுகம்




சான்வி பாண்டுரங்கன்




அக்க்ஷரா ரமேஷ்




அனிஷ் பிரபாகரன்



ஆருஷி கோகுலகிருஷ்ணன்

இஷான் கனகராஜ்




கவின் ராம் கௌரி சங்கர்





சார்விகா சுமன்




சௌம்யா ஜானகிராம்






நவீன் ஜெய்கணேஷ்

நஷாத் ரஃபிக்




ம்ரிதுளா கார்த்திக்

ஸ்ரீஜிவேஷ் பாஸ்கர்





ஸ்ரீஹர்ஷினி கிங்ஸ்ரீ

# கருணையால் வெல்வோம் கொரோனாவை

கண்ணுக்குத் தெரியாத கொரோனா நமக்குச் சொல்லி கொடுத்த முக்கியமான பாடம் கருணை. அந்த கருணையான சில நிகழ்வுகளைப் பார்ப்போம்.

கொரோனா காலத்தில் மிகவும் தேவையான ஒன்று முகக் கவசம். பல ஊர்களில் இது கிடைக்காமல் போனது. எனவே தன்னார்வலர்கள் இதனைத் தயாரித்து இல்லாதவருக்கு கிடைக்கும்படி உதவினார்கள்.

கொரோனா பாதிப்பால் மக்கள் பலர் மருத்துவமனையில் அவதிப் பட்டார்கள், எனவே நான் அவர்களுக்கு "நலம் பெறும் வாழ்த்து அட்டைகள்" தயாரித்துக் கொடுத்தேன்.

வீட்டில் உள்ள முதியவருக்கு அல்லது பக்கத்து வீட்டு முதியவருக்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுத்தும் பலர் உதவினர்.

வெளிநாட்டிலிருந்து இந்தியாவில் உள்ள தாத்தா பாட்டியுடன் நலம் விசாரித்து அடிக்கடி பேசியதால் அவர்களுக்கு மகிழ்ச்சி எனக்கும் மகழ்ச்சி!

கொரோனா கட்டுப்பாடு காலத்தில் மக்கள் வெளியே வராததால் சில விலங்குகளும் உணவு இல்லாமல் தவித்தன. இதனால் மக்கள் உணவு கொடுத்து உதவினர்.

கொரோனா தொற்று பரவாமல் இருக்க மக்கள் தேவையில்லாத பயணம், விழாக் கூட்டங்களை தவிர்த்தனர்.

முன்களப் பணியாளர்களின் குடும்பத்துக்கு உதவுவது மிக கருணையான செயல்.

ஏழை மக்களுக்கு பொருள் மற்றும் உணவு தந்து உதவி செய்த நிகழ்வுகளைப் பார்க்க முடிந்தது.



வாடகை வீட்டில் இருந்தவர்கள் வேலை இழந்ததால் அவர்களின் வீட்டு வாடகையை வீட்டு உரிமையாளர்கள் விலக்கியதும் ஒரு கருணையான செயல்.

மாணவர்களின் கல்வி தடையில்லாமல் கிடைக்க உதவிய ஆசிரியர்களுக்கு இந்த நேரத்தில் நாம் நன்றி கூறுவதும் கருணையான செயல் ஆகும்

**அர்ச்சிதா, நிலை 5**





உலகத்தையே பயப்படுத்திக் கொண்டு இருக்கும் கொரோனா என்ற கொடிய நோயை நம் அன்பினால் வென்று காட்டுவோம். நாம் இந்த நோயைக் கண்டு பயப்படக்கூடாது.

இந்தியாவில் சென்னையில் ஒரு செவிலித்தாய் தன் இரண்டு வயது குழந்தையைத் தன் கணவரிடம் விட்டு விட்டு மருத்துவமனையில் கொரோனா நோயாளிகளுக்கு பணி புரிந்து வந்தார். அந்தக் குழந்தை அம்மாவைக் காணாமல் அழுது கொண்டு இருந்தது. அதனால் குழந்தையின் அப்பா, அம்மாவை தூரத்தில் நிறுத்தி அந்தக் குழந்தையைக் காண்பித்தார். அம்மாவிடம் ஓட முயற்சி செய்து குழந்தை மிகவும் அழுதது. ஆனால் கட்டுப்பாடு காரணமாக அந்த அம்மாவும் குழந்தையைத் தூரத்திலிருந்து கையை அசைத்து சைகை காட்டி குழந்தையை சமாதானப் படுத்தி விட்டுச்சென்றார். இதைப் பார்த்த அருகில் இருந்தவர்கள் கண் கலங்கி அழுதார்கள்.

தன் குழந்தையின் அழுகையைவிட பல நூறு மக்களின் உயிர் காப்பது மிகவும் முக்கியமானது என்று அந்த அம்மாவின் கருணை உள்ளமும் கடமை உணர்வும் எல்லாருக்கும் இருந்தால் கொடிய கொரோனாவை வென்று காட்டலாம் என்பது என்னுடைய கருத்து.

நன்றி!

**அவனீஷ் விஜய், நிலை 5**







நாம் சென்ற ஒரு வருட காலம் கொரோனா என்னும் கொடிய நோயால் கஷ்டப்படுகிறோம். இந்த கொரோனா காலத்தில் பல நல்ல கருணை உள்ள மனிதர்கள் நமக்கு உதவி செய்கிறார்கள். அதில் முதலில் மருத்துவப் பணியாளர்களும் செவிலியர்களும் தன்னலம் பாராமல் மிகவும் கவனமாக நோயாளிகளுக்கு மருத்துவ உதவி செய்து உதவினார்கள். அடுத்து சுகாதார பணியாளர்களும் நோய் கண்ட இடத்தில் எல்லாம் சென்று தூய்மைப் படுத்தினார்கள். வாகன ஓட்டுநர்களும் நோயாளிகளை மருத்துவமனைக்கு அழைத்து வந்து உதவினார்கள். நமது ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் தடையின்றி பாடங்களைக் காணொலி காட்சி மூலம் கற்பிக்கின்றனர். சில சிறுவர்கள் முகக் கவசங்கள் தயாரித்து வயதானவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் கொடுத்தார்கள். நமது செயின்ட் லூயிஸ் நூலகம் மற்றும் சில பள்ளிகள் இலவசமாக உணவுகளை பல குடும்பங்களுக்கு வழங்கியது. தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள் வீட்டிற்கு வந்து கபசுர குடிநீர் மருந்து பொடிகளை வழங்கினார்கள். வயது முதியவர்களுக்கு இளைஞர்கள் மற்றும் சமுதாயத்தினர் வீட்டு உபயோக சாமான்களை வரவழைத்து தந்தார்கள். மளிகை கடைக்காரர், காய்கறி விற்பவர்கள் வீட்டிற்கே வந்து பொருட்களை தந்து உதவினார்கள். கொரோனாவுக்கான தடுப்பூசியைக் கண்டுபிடிப்பதில் விஞ்ஞானிகள் மேற்கொண்ட கடின உழைப்பிற்கு நன்றி.

இத்தனை கருணை உள்ளம் கொண்டவர்களுக்கு நாம் நமது நன்றியை தெரிவிப்போம்.

**– அனிருத், நிலை 5**



கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் நாம் ஒருவருக்கொருவர் கருணையுடனும், அன்புடனும் நடந்துகொள்வது அவசியமாகும். தேவைப்படும் மக்களுக்கும் சமூகங்களுக்கும் உணவு கொடுக்கலாம். மருத்துவர் மற்றும் செவிலியரின் தன்னலமற்ற சேவைக்குப் பாராட்டுவோம். சுகாதார தொழிலாளர்களின் சேவையும் போற்றுதலுக்குரியது. தேவைப்படும் மக்களுக்கும், மருத்துவர் மற்றும் செவிலியர்களுக்கும் முகக் கவசம் மற்றும் கையுறைகள் நன்கொடையாக வழங்கலாம். தேவை இல்லாமல் வெளியில் செல்வதைத் தவிர்த்தால் தொற்று பரவுவதை தடுக்கலாம். தேவைக்கு ஏற்ப பொருட்களை வாங்கலாம். அதன்மூலம் பிறருக்கும் அத்தியாவசிய பொருட்கள் தடையின்றிக் கிடைக்க வழி செய்யலாம். நமக்கு உடல் நலக்குறைவு இருந்தால் வெளியில் செல்வதைத் தவிர்த்து வீட்டில் நம்மை நாமே தனிமைப் படுத்துவதன் மூலம் தொற்று பரவுவதைத் தடுக்கலாம். பெற்றோருக்கு உதவி செய்வதன் மூலம் அவர்களின் பணி சுமையையும் குறைக்கலாம். ஒற்றுமையோடு செயல்படுவோம்! கொரோனாவை வெல்வோம்! நன்றி!

**கனிஷ்கா வினோமனோகரன், நிலை 5**



இப்போது கொரோனா ஊரடங்கு உத்தரவின் காரணமாக நிறைய பேர் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் கருணையுடன் நாம் செய்யும் சிறிய செயல் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். தேவைப்படும் மக்களுக்கு அரசாங்கம் இலவச பள்ளி மதிய உணவு வழங்குவது போல், நாம் அனைவரும் நம் அன்பையும் தயவையும் காட்டினால், கொரோனா வைரஸை தோற்கடிக்க முடியும். அத்தியாவசிய பொருட்களை நன்கொடையாக வழங்குவது அல்லது போர்வைகள் மற்றும் உணவு வழங்குவது போன்ற பல நல்ல விஷயங்களை நீங்கள் செய்யலாம். நீங்கள் ஏதாவது நல்லது செய்யும் போது, அது உங்களை பெருமையாக உணரவைக்கும். எனவே என்ன நடந்தாலும் நாம் எப்போதும் மற்றவர்களைப் பற்றியும் சிந்திக்க வேண்டும், இதன் மூலம் கொரோனாவை முழுவதுமாக எதிர்த்துப் போராட முடியும்.

**சுருதி ஜெயபிரகாஷ், நிலை 5**







உலகம் முழுவதும் கொரோனா நோயால் பாதிக்கப்பட்ட இந்தச் சூழ்நிலையில் அனைவரிடமும் அன்போடும் பாசத்தோடும் பழக வேண்டும். கொரோனா நோயாளிகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி உடைய சத்தான உணவுகளை வழங்கலாம். அவர்களிடம் இருந்து விலகி இருக்க வேண்டுமே தவிர அவர்களை ஒதுக்கி வைக்க கூடாது. கொரோனா வைரஸ் பரவலை தடுக்க நம்மையும், வீடுகள், பொது இடங்களை சுத்தப் படுத்தி தூய்மையாக வைத்து இருக்கலாம் . தனியாக வாழும் முதியவர்களுக்கு மருத்துவ தேவைகளையும், மற்ற தேவைகளையும் பூர்த்தி செய்ய நம்மால் முடிந்த அளவுக்கு உதவி செய்யாலாம். ஏழை மக்களுக்கு உணவு தேவைகளை நம்மால் முடிந்த அளவு பூர்த்தி செய்யலாம். கொரோனா வைரஸில் இருந்து நம்மை பாதுகாத்து கொள்வது எப்படி என மற்றவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தலாம். வேலை வாய்ப்பை இழந்து வறுமையில் உள்ளவர்களுக்குப் பண உதவியோ வேறு விதமான உதவிகளையோ செய்யலாம். முகக்கவசங்கள், கிருமி நாசினிகள் போன்றவற்றைக் கொடுத்து உதவலாம். நோயால் பாதித்தவர்களுக்கு நம்பிக்கையும், மன தைரியத்தையும் ஊக்குவித்து அவர்கள் உடல் ஆரோக்கியம் பெற உதவலாம். எல்லோரும் ஒற்றுமையாக, உதவியாக, உறுதியாக இருந்தால் தான் நாம் கொரோனா வைரைஸில் இருந்து நம்மை பாதுகாக்க முடியும். ஒன்று பட்டு உதவியாக இருப்போம்.

**சஞ்ஜனா ஶ்ரீநிதி பாபுராஜ், நிலை 5**




கொரோனா காலத்தில் மனிதநேயம் மற்றும் கருணையுடன் கலந்த அறச்செயல்களை நாம் அனைவரும் பல வடிவில் காண முடிந்தது. மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்ட ஆசிரியர்கள் இணைய வழியில் பாடம் கற்பிக்கிறார்கள்.

படிப்பல்லாத பிற பயிற்சி வகுப்புகளை ஆசிரியர்கள் இலவசமாக வழங்கினார்கள். முடக்க காலத்தில் வேலை இழந்த ஆசிரியர்களுக்கு பெற்றோர்கள் தங்கள் ஆதரவை, பணம் உதவியுடன் தெரிவித்தனர். வீட்டை விட்டு வெளியே வர முடியாமலிருந்த சூழ்நிலையில், சலிப்படைந்த தாத்தா பாட்டியுடன் நாம் தொடர்பு கொண்டு மகிழ்ச்சியையும் ஆதரவையும் தெரிவித்தோம். முதியவர்கள் ஆன்லைனில் வாங்கிய பொருட்களை தன்னார்வலர்கள் தங்கள் நேரத்தை செலவிட்டு அவர்களின் வீட்டுக்குச் சென்று வழங்கினர். மருத்துவத் துறையினர் தங்கள் குடும்பத்தைவிட்டு தம் மக்கள் நலனை கருதி இரவும் பகலும் உழைத்து இந்த தொற்று நோய்க்கான தடுப்பூசியை வேகமாக கண்டுபிடித்தனர்.

அனைவரும் கருணையாளர்களே !!! அனைத்து இடங்களிலும் கருணை நிரம்பி இருக்கிறது !!!

**தனிஷ் சட்டநாதன் – நிலை 5**



இந்த தொற்றுநோய்களின் போது நீங்கள் கருணைமிக்க செயல்கள் இயன்ற வரை செய்ய முடியும். தொண்டுக்கு நன்கொடை அளிப்பது ஒரு நல்ல செயல், ஆனால் இந்த தொற்றுநோய்களின் போது, நீங்கள் முதியோர் இல்லங்கள் அல்லது அனாதை இல்லங்களுக்கு செல்ல முடியாது. இதனால் அந்த இடங்களில் இருப்பவர்களுக்கு உதவ நிதி சேகரிப்பது கடினம். அதனால்தான் நீங்கள் ஆன்லைன் நிதி சேகரிப்பாளர்களுக்கு நன்கொடை வழங்கலாம். ஆன்லைன் நிதி சேகரிப்பாளர்கள் தேவைப்படுபவர்களுக்கு பெரிதும் உதவியுள்ளனர். அவை மிகவும் நம்பகமானவை, மேலும் பணம் எங்கு செல்ல வேண்டுமென்பதை அவர்கள் உறுதி செய்கிறார்கள். இந்த பணம், ஆடை, உணவு மற்றும் தங்குமிடம் போன்ற மக்களின் தேவைகளை நோக்கி செல்கிறது. நீங்கள் உதவ என்ன செய்ய முடியும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. எனது பெயர் தருண் பிருதிவிராஜ் மற்றும் எனது பகுதியைப் படித்ததற்கு நன்றி.

**தருண் ராஜ், நிலை –5**



கொரோனா நோயினால் உலகிற்கு இது மிகவும் கடினமான காலமாகும். இத்தொற்றால் உலகெங்கும் கோடிக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர். இக்கடினமான காலத்தில் நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் கனிவுடனும் கருணையுடனும் இருப்பது மிகவும் அவசியமாகும். பல ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வேலைகளை இழந்து தவிக்கின்றனர். அவர்களுக்கு நம்மால் இயன்ற உதவி மற்றும் நன்கொடையை தொண்டு அமைப்புகளின் மூலம் செய்யலாம்.மருத்துவதுறையினர் கொரோனா நோயாளிகளை குணப்படுத்துவதற்காக அல்லும் பகலும் அயராமல் உழைத்து வருகிறார்கள், அது மட்டுமல்லாமல் தடுப்பூசியையும் கண்டுபிடித்துள்ளனர். சமூக இடைவெளியை கடைப்பிடித்தல் மற்றும் முகக்கவசம் அணிவதின் மூலம் அவர்களுக்கு நமது நன்றியை தெரிவிக்கலாம். ஆசிரியர்கள், தபால்காரர்கள் மற்றும் பல்வேறு துறையை சேர்ந்த முன்னணி ஊழியர்கள் தங்கள் பாதுகாப்பை தியாகம் செய்து உழைத்து வருகின்றனர். இவர்கள் அனைவருக்கும் நமக்கு கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்தி நன்றிகளைத் தெரிவிக்க வேண்டும். குழந்தைகளான நாம் நமது உற்றார் உறவினர்களை நேரடியாக சந்திக்க இயலவில்லை என்றாலும் தொலைபேசி மூலமாக அவர்களது நலனை விசாரிக்கலாம் மற்றும் சூழ்நிலைக்கேற்றவாறு நன்னடத்தையுடன் நடந்து கொள்வதன் மூலம் இத்தொற்று காலத்தை எளிதாகக் கடந்து விடலாம்.



**தன்வி மகாராஜ், நிலை 5**



கொரோனா மனிதர்களுக்கு நிறைய பாடம் கற்றுத்தந்துள்ளது. நமக்கு மருத்துவர்களின் மகத்துவம் புரிந்தது. சுத்தம் செய்பவர்கள் தங்கள் உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் நமக்காக உழைத்தார்கள். தன்னார்வலர்கள், வீட்டிலேயே இருக்கும் வயதானவர்களுக்கு உதவி செய்தார்கள். வியாபாரிகள் அத்தியாவசிய பொருட்கள் நமக்கு எந்த நேரமும் கிடைக்கும் படி செய்தார்கள். வீட்டிற்கே கொண்டு வந்து உணவு, மளிகை, காய்கள், பழங்கள், கொடுத்தார்கள். ஆசிரியர்கள் வீட்டில் இருந்தபடி நமக்கு பாடம் கற்றுத்தந்தார்கள். நிறைய மனிதர்கள் பண உதவி செய்தார்கள். அனைவரும்

ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக இருந்தார்கள். நாம் அனைவரும், சுத்தமாக இருந்து, நல்ல உணவுகளை சாப்பிட்டு, இயற்கையைக் காத்து, கருணையால் வெல்வோம் கொரோனாவை. நன்றி

**தியா ராஜேஷ், நிலை 5**

கொரோனா காலத்தில், நாம் அனை வருக்கும் அன்பும், பாசமும் காட்ட வேண்டும். நான் என்னால் முடிந்த உதவிகளை மக்களுக்கு செய்தேன். நான் சிறிய பரிசுகளைத் தேவைப் படுபவர்களுக்கு கொடுத்தேன்.

என் அம்மா மற்றும் அப்பா சாப்பாடு வழங்கினார்கள். நானும் எனது தம்பியும் வாழ்த்து அட்டை எழுதித் தந்தோம். நாங்கள் தேவைப்படும் போது மட்டும் வெளியே சென்றோம். நான் மக்களுக்கு முகக்கவசம் அணிய வும், தேவைப்பட்டால் மட்டும் வெளியே செல்லவும் அறிவுறுத்தினேன்.


நாம் அனைவரும் மருத்துவர் களுக்கு நன்றி சொல்ல வேண்டும். நன்றி!

**நித்யஸ்ரீ பாஸ்கர், நிலை 5**



நாம் கடைக்குச் செல்லும் போது நண்பர்களின் தேவையை அறிந்துகொண்டு அவர்களுக்கும் சேர்த்து பொருட்களை வாங்கலாம். தன்னார்வலராகவும் தேவைப்படும் பொழுது உதவ வேண்டும் . நண்பர்கள் மற்றும் உறவினர்களின் நலம் விசாரிக்க வேண்டும் . இது அவர்களுக்கு பாதுகாப்பு உணர்வு தரும் . இயலாதவர்களுக்கு உணவு அல்லது பணம் கொடுத்து உதவ வேண்டும். தேவைக்கு அதிகமான பொருட்களை வாங்கக்கூடாது. வாங்கிய பொருட்களை வீணாக்கக்கூடாது. நாம் அரசின் விதிமுறைகளை கட்டுப்பாட்டுடன் பின்பற்றவேண்டும் மற்றும் நமது சிறிய சந்தோஷங்களை தியாகம் செய்வதால் நோய் தொற்று பரவாமல் நம்மையும் நம்மைச் சுற்றியுள்ள மனிதர்களையும் காக்கலாம். இது நமக்கு நாமே புரியும் உதவி மட்டுமல்ல பிறருக்கும் உதவும் ஒரு சிறந்த வழியாகும். அதுமட்டும் இன்றி இவ்வழியை பின்பற்றுவதன் மூலம் நாம் மருத்துவர்களுக்கும், செவிலியர்களுக்கும் மற்றும் காவல்துறையினர் களுக்கும் உதவி செய்கிறோம். இப்படி பிறரை மனதில் எண்ணி நாம் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தால் எந்தவித தொற்றையும் கூடிய விரைவில் இவ்வுலகை விட்டு அனுப்பிவிடலாம். நன்றி !!!

**பாலகிருஷ்ணன், நிலை 5**



21ஆம் நூற்றாண்டில் அனைத்து பருவத்தினரையும் கதிகலங்க வைத்த ஒரு கொடிய நுண்கிருமிதான் இந்த கொரோனா. இந்த இக்கட்டான காலகட்டத்தில், தான்-தனக்கு என உயிரைக் காப்பாற்றிக்கொள்ள முயன்று கொண்டிருந்த மனிதர்கள் மத்தியிலும் அடுத்தவரின் துயர் துடைக்கும் அருமருந்தாக, மனிதநேயம் முடங்கிப்போகவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக,



இத்தாலி நாட்டு மருத்துவமனையில் இக்கொடிய நோயினால் பாதிக்கப்பட்டு சுவாச பிரச்சனையால் உயிருக்கு போராடிய இளைஞனின் உயிரை காப்பாற்ற 90 வயது நிரம்பிய இதே நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைப்பெற்று வந்த மூதாட்டி ஒருவர் தனக்கு பொருத்தப்பட்டிருந்த சுவாசக் கருவியை வாழவேண்டிய வயதுடைய அந்த இளைஞனுக்கு பொறுத்துங்கள் எனக்கூறி தன்னுயிரை தியாகம் செய்தார் (சுவாசக் கருவிக்கு மிகுந்த தட்டுப்பாடு இருந்த நேரமிது), அந்த இளைஞரும் காப்பாற்றப்பட்டார். அம்மூதாட்டியின் கருணைச் செயல் உலக மக்களால் பேசப்படுகிறது, பாராட்டப்படுகிறது. அவரின் தன்னலம் பாராச் செயல் என்றும் நிலைத்திருக்கும்.

இது போன்ற அசாதாரண சூழ்நிலையில் சுயநலம் பாராது பொதுநலனில் அக்கறைக்கொண்டு பணியாற்றிய, தொடர்ந்து பணியாற்றிவரும் மருத்துவத்துறையினர், சுகாதாரப் பணியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள், காவல்துறையினர், இவர்களின் கருணை உள்ளத்திற்கு என் சிரம்தாழ்ந்த வணக்கங்கள். எனக்கும் பொது சேவைகள் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்திய இவர்களின் செயலை கண்டு மனம் நெகிழ்ந்து போகிறேன்.

**பெலிசியா இராபர்ட் ராஜகுமார் , நிலை 5**



இணையப் பள்ளியில் எங்களுக்குக் கற்பிக்க கடுமையாக உழைத்தமைக்கு நன்றி தெரிவிக்க எனது ஆசிரியரை சமூக இடைவெளியில் பார்வையிட்டேன். எனது பள்ளி மாவட்டம், காலை உணவை உண்டாக்கி ,உணவை வாங்க முடியாத குழந்தைகளுக்கு இலவசமாக கொடுக்கிறார்கள், அதற்காக நான் அவர்களுக்கு நன்றி கூறுகிறன். எனது பள்ளி ஒவ்வொரு மாணவருக்கும் கணினிகளை வழங்கியுள்ளது, எனவே கணினி அல்லது வைஃபை இல்லையென்றாலும் அவர்கள் கல்வி கற்க முடியும்.பல மருத்துவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் இருக்க முடியவில்லை, ஏனென்றால் அவர்கள் மக்களை பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க மிகவும் கடினமாக உழைக்கிறார்கள். எங்கள் குடும்பத்தினர் மருத்துவர்களுக்கு உதவவும் நன்றி தெரிவிக்கவும் நன்கொடை அளித்தனர்.நாங்கள் கடைக்குச் செல்ல முடியாதபோது எங்கள் மளிகை மற்றும் உணவை வழங்கிய விநியோகிக்கு நன்றி. ஒவ்வொருவரும் பாதுகாப்பாக இருக்க முகமூடிகளை அணிந்துகொள்கிறார்கள். உதவியாக இருக்கும் நல்ல நண்பர்களைக் கொண்டிருப்பதற்கு நான் நன்றி கூறுகிறேன். கடைசியாக, என் குடும்பத்திற்கு நான் நன்றியுள்ளவளாக இருக்கிறேன், ஏனென்றால் என் பெற்றோர் கடுமையாக உழைக்கிறார்கள், எல்லாம் மீண்டும் இயல்பாக இருக்க விரும்புகிறேன்.

**மாண்யா, நிலை 5**



இந்த நூற்றாண்டு கண்டிராத பெரும் தொற்று, பூமி பந்து சுழல்வதை நிறுத்திக்கொண்டது போல, உலகில் உள்ள அனைத்து நாடுகளும் கட்டுப்பாடுகளை விதித்து மக்களை வீட்டுக்குள் அடைத்தது.

மக்கள் அனைவரும் சொல்ல முடியாத துயரத்திற்கு உள்ளானார்கள். மக்களின் உணவு தேவைக்கும், மாத வீட்டு வாடகைக்கும் மிகவும் கடினமான நிலை ஏற்பட்டது. கீழ்க்காணும் திருக்குறளுக்கு இணங்க:

**கண்ணோட்டம் என்னுங் கழிபெருங் காரிகை**

**உண்மையான் உண்டிவ் வுலகு**

இந்த உலகம், அன்பும் இரக்கமும் இணைந்த கண்ணோட்டம் எனப்படுகிற பெரும் அழகைக் கொண்டவர்கள் இருப்பதால்தான் பெருமை அடைகிறது.

இந்த உலகில் வாழும் அன்புள்ளம் கொண்ட மக்கள் தன் சுற்றத்தார்க்கு உணவு அளித்து, வீடுகளுக்கு சில மாத வாடகையை விட்டுக்கொடுத்து அனைவருக்கும் உதவினர். சிலர் தங்களுடைய கட்டிடங்களை கொரோனா பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை பெறும் இடமாக மாற்றி கொடுத்தனர். மனம் நெகிழும் பல நிகழ்வுகளை இந்த காலம் நம் கண்முன் காட்டியுள்ளது.

**ஸ்ரீநிதி சிக்கல் குமார், நிலை 5**





கோவிட்-19 என்பது ஒரு உலகளாவிய புதிய தொற்று நோய் ஆகும். அனைவருக்கும் இது மிகவும் கடினமாக உள்ள ஒரு காலம். அனைவரையும் தனிமைப் படுத்தியது, வீட்டில் இருந்து வேலை செய்ய வைத்தது, பள்ளிக்கு செல்ல முடியாமல் இருக்க வைத்தது என நிறைய கஷ்டப்படுத்தியது.

**நாம் பார்த்த சில கருணையான செயல்கள் :**

- அனைவரும் முகமூடி போட்டு அவர்களையும் மற்றும் சுற்றி இருப்பவர்களையும் பாதுகாப்பாக வைக்கிறார்கள்.
- மருத்துவ பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் எப்போதும் வேலை செய்து மக்களைக் காக்கிறார்கள்.
- அரசு தேவை உள்ளவர்களுக்கு பணம், உணவு மற்றும் தேவையான உதவிகளை செய்கிறது.
- பள்ளிகள் மூடப்பட்டது, ஆனாலும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இணையம் மூலமாக தொடர்பின்றி வகுப்பு எடுத்து உதவுகிறார்கள்.
- நிறுவனங்கள் வேலை செய்ய முடியாதவர்களுக்கு சில மாதங்களுக்கு சம்பளம் கொடுத்தார்கள்.
- கடை முதலாளிகள் உணவகங்களை மூடி நோய் தொற்று பரவாமல் தடுக்கிறார்கள்.

**நாம் எப்படி கருணையுடன் இருக்கலாம்?**



- தனித்து இருந்து நோய் தொற்று பரவாமல் தடுக்கலாம். வெளியில் செல்லும் நேரத்தில் முகமூடி கட்டாயமாக போடலாம்.
- நமக்கு உதவி செய்யும் தொழிலாளர்களுக்கு நம்மால் முடிந்த ஆதரவு அளிக்கலாம்.
- தொலைபேசியில் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு அடிக்கடி பேசி நலம் விசாரிக்கலாம்.
- நம்மால் முடிந்த உதவிகள் பணமாகவோ, மளிகையாகவோ அல்லது சேவையாகவோ மற்றவர்களுக்கு உதவலாம்.
- வீட்டு உரிமையாளர்கள் வாடகை பணத்தில் சற்று குறைக்கலாம்.

**விஹான் மாதவன், நிலை 5**



- கொரோனா - இயற்கையின் சீற்றம் இப்படியும் வருமென்று உலகுக்கு உணர்த்திய வாரத்தை.
- உலகம் முழுவதும் ஆட்டிப் படைத்தது கொரோனா . மக்கள் வீட்டில் முடங்கினார்கள். இயல்பு வாழ்க்கை முழுவதும் பாதித்தது. கொத்துக் கொத்தாய் மக்கள் இறந்தார்கள். உணவில்லாமல் ஏழைகள் துன்புற்றனர்.
- கொரோனா - அழிவை மட்டுமே தந்ததா? இல்லை , மனிதர்கள் இடையே கருணையையும் விதைத்தது.
- ஆம். தன் வாழ்க்கையை மட்டும் நினைத்த மனிதனை பிறரைப் பற்றியும் யோசிக்க வைத்தது கொரோனா . கருணையின் இருப்பிடம் ஆனான் மனிதன்.
- தனிமனிதராகவும் தன்னார்வலர்கள் ஆகவும் மக்களுக்கு உதவினர்.
- உணவு கொடுத்தவர்கள் ஏராளம். விவசாயிகள் விளை பொருட்களை நன்கொடையாக அளித்தனர்
- தன்னால் முடிந்த உதவிகளைப் பிறருக்கு செய்தார்கள்.
- மனிதர்கள் இடையே மீண்டும் கருணை பிறப்பெடுத்தது.
- தற்போது உலகம் மெல்ல மெல்ல மீண்டு வருகிறது.
- மருத்துவமனை, மருந்துகள், மருத்துவர்கள் இவையெல்லாம் இருந்தபொழுதும் கருணையும் தேவைப்படுகிறது கொரோனாவை வெல்வதற்கு.

-

**ஹர்ஷிதா ஸ்ம்ரிதி பிரபாகர், நிலை 5**





## தேஜஸ்வினி வெங்கட்
## நிலை 6



## கயல்விழி ராஜேந்திரன்









## திருக்குறள் புதிர்

# கண்டுபிடி! கண்டுபிடி!

இங்கே 29 படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்தப் படங்களின் பெயர்களை வைத்து அதன் எழுத்துகளை கொடுக்கப்பட்டுள்ள எழுத்துக்களின் வரிசைப்படி சரியான எழுத்துகளை கட்டத்திற்குள் எழுதுங்கள். மொத்த கட்டத்திலுள்ள எழுத்துக்களையும் ஒன்று சேர்த்து படித்துப் பாருங்கள். ஒரு திருக்குறள் கிடைக்கும்.



| | | |
|---|---|---|
| whats App | - | புலனம் |
| Youtube | - | வலைவெளி |
| Instagram | - | படவரி |
| Wechat | - | அளாவி |
| Messanger | - | பற்றியம் |
| Twtter | - | கீச்சகம் |
| Telegram | - | தொலைவரி |
| Skype | - | காயலை |
| Bluetooth | - | ஊடலை |
| WiFi | - | அருகலை |
| Hotspot | - | பகிரலை |
| Broadband | - | ஆலலை |
| Online | - | இயங்கலை |
| Offine | - | முடக்கலை |
| Thumbdrive | - | விரலி |
| Hard disk | - | வன்தட்டு |
| GPS | - | தடங்காடி |

# மலரின் பருவங்கள்



ஊழ்
நனை
முகை
மொக்குள்
அரும்பு
மொட்டு
போது
மலர்
பூ
பொம்மல்
வீ
செம்மல்

# 2020–2021 ஆம் ஆண்டு பட்டதாரிகள்



அக்ஷிதா சந்தோஷ்


சம்ரிதா சிவசங்கர்



சுஜீத்பாலா ராஜகோபால்


நவீன் நாராயணன்


பிரஜித் ராயப்ரோலு


மானவ் ராஜா வினோதா


ரிதன்யா சிவபாலன்


ரியா அசோக்


லக்ஷிதா செந்தில்

# தமிழ் பள்ளி ஆசிரியர்கள், தன்னார்வலர்கள்



திருமதி. சுமதி விஜய்
மழலை



திருமதி. ராமலக்ஷ்மி ஆனந்த்
மழலை



திருமதி. வினோதா பிருத்திவிராஜ்
மழலை



திருமதி. விஜிலா சுதாகர்
மழலை



திருமதி. ஸ்ரீநிதி ஜெகன்நாதன்
மழலை



திருமதி. ஈஸ்வரவடிவூ சங்கரசுப்ரமணியம்
மழலை



திருமதி. சுஜாதா செந்தில்குமார்
மழலை



சந்தோஷ் ஜோதிலிங்கம்
மழலை (youth volunteer)



பிரணவ் பழனியப்பன்
மழலை (youth volunteer)



விக்குந் நந்தகுமார்
மழலை (youth volunteer)



திருமதி. ராஜேஸ்வரி விக்ரமன்
நிலை 1



திருமதி. திவ்யா பாலா
நிலை 1



**திருமதி. நவஜோதி நமசிவாயம்**
நிலை 1



**திருமதி. அனு நந்தகுமார்**
நிலை 1



**திருமதி. ஆனந்தி வெங்கட்**
நிலை 1



**திருமதி. உமா மகேஷ்வரி பிரதீப்**
நிலை 1



**திருமதி. ஐஸ்வர்யா**
நிலை 1



**திருமதி. கவிதா தாமல்**
நிலை 1



**திருமதி. சாந்தி ஜெயபிரகாஷ்**
நிலை 1



**திருமதி. தீபா ரகுராமன்**
நிலை 2



**திருமதி. ரேணுகா தேவி**
நிலை 2



**திருமதி. ரம்யா சங்கர்**
நிலை 2



**திருமதி. வைஷ்ணவி ஜனார்த்தனன்**
நிலை 2



**திருமதி. அருணா குமார்**
நிலை 2



**திருமதி. அனிதா விஜயகுமார்**
நிலை 2



**திரு. கார்த்திகேயன் ரத்தினம்**
நிலை 2



**திருமதி. சசிகலா கருப்புச்சாமி**
நிலை 2



**திரு. ஷ்ரேயாஸ் சக்திவேல்**
நிலை 2 (youth volunteer)



திருமதி. செந்தில்நாயகி சுப்பிரமணியன்
நிலை 3



திருமதி. ஸ்ரீமதி அருண்குமார்
நிலை 3



திருமதி. பிரியா ஞானசிவம்
நிலை 3



திரு. சக்திவேல் ஜெகதீசன்
நிலை 3



திருமதி. கலா ராமலிங்கம்
நிலை 3



திருமதி. புவனேஷ்வரி பாண்டுரங்கன்
நிலை 3



திருமதி. கோகிலா தர்மராஜன்
நிலை 3



திருமதி. ஷோபனாதேவி பாலசுப்பிரமணி
நிலை 3



திருமதி. கலைவாணி நிரஞ்சன்
நிலை 3



திரு. சிக்கல் குமார் நாகராஜன்
நிலை 3



திருமதி. நித்யா விஜயகுமார்
நிலை 3



திருமதி. ரம்யா ஜானகிராம்
நிலை 4



திருமதி. எழிலரசி ஆறுமுகம்
நிலை 4



திருமதி. சரண்யாதேவி கண்ணன்
நிலை 4



திருமதி. சுபாராஜேஸ்வரி ஜெய்கணேஷ்
நிலை 4



திருமதி. மீரா ஜெயபால்
நிலை 4



**திருமதி. ஆஷா ஜேசு**
நிலை 4



**திரு. ஜோதிலிங்கம் சிவபாக்கியம்**
நிலை 4



**திருமதி. அனுராதா**
நிலை 4



**திரு. நாராயணன் நாராயணன்**
நிலை 5



**திருமதி. கோமதிசங்கரி ராஜமாடசாமி**
நிலை 5



**திரு. சங்கரநாராயணன் ராமசந்திரன்**
நிலை 5



**திரு. ராபர்ட் அருண் ஜேம்ஸ்**
நிலை 5



**திருமதி. அபிராமி சுரேஷ்குமார்**
நிலை 5



**திருமதி. கயல்விழி ராஜேந்திரன்**
நிலை 5



**திருமதி. காயத்திரி கிருஷ்ணமூர்த்தி**
நிலை 5



**திரு. சிவராஜன் ஐயப்பன்**
நிலை 5



**திருமதி. தாரகேஸ்வரி ராஜேஷ்**
நிலை 5



**திரு. கோகுல்**
நிலை 5



**திரு. பிருத்திவிராஜ் சிவராஜ்**
நிலை 5

நிலை 5
**திருமதி. தீபா பார்த்தசாரதி**



**மணிஷா விஜய்**
நிலை 5
**(youth volunteer)**



ஹ்ருதய் வி. சுஸ்வரம்
நிலை 5
(youth volunteer)



திருமதி. பாரதி ராஜூ
நிலை 6



திருமதி. அனு கண்ணன்
நிலை 6



திருமதி. தாமரை இளங்கோவன்
நிலை 6



திருமதி. யசோதா இளங்கோ
நிலை 6



திரு. இளங்கோவன் தங்கவேலு
நிலை 8



திருமதி. கீதா சிவசங்கர்
நிலை 8



திருமதி. மஞ்சு மணி
நிலை 8

# தன்னார்வலர்கள்



திருமதி. ஆனந்தி ஜெயராமன்



திரு.தர்மா



திருமதி. பூரணி சாரதி



திரு.டில்லிபாபு ஆறுமுகநாயக்கர் கணேசன்

# தன்னார்வலர்கள்

திருமதி. சுனிதா ஜோதிலிங்கம்
திரு. ஞானசிவம் பழனியப்பன்
திரு. ஸ்ரீதர் கோவிந்தன்
திரு. முனி கந்தசாமி
திருமதி. வித்யா மாணிக்கம்
திரு. ராஜா ராஜசேகரன்
திரு. மதியழகன் நாகப்பன்
திருமதி. கோகிலா தனபால்
திருமதி. திவ்யா பிரதீப்
திருமதி. புவனா சந்தோஷ்

திருமதி. விஜயா நாராயணன்
திரு. சந்தோஷ்குமார் ராதாகிருஷ்ணன்
திரு. பிரதீப் ராஜேந்திரன்
திரு. பூபதி சாமிக்கண்ணு
திரு. சுரேஷ்குமார் நடராஜன்
மாணவ் ராஜா வினோதா
நவீன் நாராயணன்
ஆதிசரண் ஸ்ரீதர்
கனிஷ்க் சண்முகம்

# செயற்குழு நிர்வாகிகள்



தலைவர்
திரு. செந்தில் இராதாகிருட்டிணன்



இயக்குனர்
திரு.சிவசங்கர் சங்கரநாராயணன்



வளர்ச்சி பணி இயக்குனர்
திரு. இளங்கோ திருப்பதி



பால்வின் கிளை முதல்வர்
திருமதி.பிரியா ஸ்ரீதர்



துணை முதல்வர்
திரு.நாராயணன் நாராயணன்



ஓ பாலன் கிளை முதல்வர்
திரு.ராஜா கிருஷ்ணசாமி



துணை முதல்வர்
திருமதி.பிரியா ஞானசிவம்



துணை முதல்வர்
திருமதி.நவஜோதி நமசிவாயம்



செயலாளர்
திரு.ஜோதிலிங்கம் சிவபாக்கியம்



இணைச் செயலாளர்
திருமதி. சுமதி விஜய்



பொருளாளர்
திரு.நந்தகுமார் ஹரிதாஸ்



இணைப் பொருளாளர்
திரு.கார்த்திக் ரத்தினம்



ஆய்வு மற்றும் தொழில்நுட்ப இயக்குனர்
திரு. தனபால் ராதாகிருஷ்ணன்



தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்
திருமதி. ரம்யா ஜானகிராம்



பள்ளி அங்கீகாரம் ஒருங்கிணைப்பாளர்
திரு. ராஜகோபால் கருப்பசாமி

# தமிழ்ப்பள்ளி இயக்குனர் குழு


திருமதி. பாரதி ராஜு


திரு. தாஸ் பலராமன்


திரு. இளங்கோ திருப்பதி


திரு. ராஜா கிருஷ்ணசாமி


திரு. செந்தில் இராதாகிருட்டிணன்


திருமதி. பிரியா ஸ்ரீதர்


திரு. சிவசங்கர் சங்கரநாராயணன்


திரு. கணிக்கண்ணன்


திரு இரா.பொற்செழியன்

# உலக மொழி தரப்புள்ளிகள் பெற்றவர்கள்



பிரணவ் பழனியப்பன்



மிர்ரா ராமகிருஷ்ணன்



ஆதிசரண் ஸ்ரீதர்



அனன்யா செந்தில்நாதன்

MISSOURI TAMIL SCHOOL
மிசௌரி தமிழ்ப் பள்ளி

நமது தமிழ் மொழி விலைமதிக்க முடியாத பாரம்பரிய சொத்து. நமது பண்பாட்டின் அடையாளம். யார் என்பதற்கான முகவரி!
அதை உங்கள் குழந்தைக்கு வழங்கவேண்டுமெனில் தமிழ்மொழி கற்றுக்கொடுங்கள். அமெரிக்காவில் மட்டும் 3000க்கும் மேற்பட்ட குழந்தைகள் தமிழ் கற்கிறார்கள். அதேபோல் தமிழறிந்த அமெரிக்கத் தமிழராய் உங்கள் குழந்தையும் இருக்க வேண்டுமா?

American Tamil Academy

ACCREDITED cognia

## 30 ஆண்டுகளாக செயின்ட் லூயிசில் நூற்றுக்கணக்கான தமிழ் மாணவர்களை உருவாக்கியுள்ளது.




# மிசௌரி தமிழ்ப்பள்ளியில் சேருங்கள்

**Locations**
**Ballwin Branch**
HINDU TEMPLE CULTURAL AND EDUCATION CENTER.
725 Weidman Rd, Ballwin, MO 63011

**OFallon Branch**
Spencer Road branch library
427, Spencer Road,
St. Peters, MO - 63376

## Visit our website for Student/ Volunteer Registration Form.
## Registration closes: Aug 15th.

Contacts:
**https://school.motamilsangam.org/**
**and email to school@school.motamilsangam.org**
**[O'Fallon] Siva Sankar- 314 495 8817, Priya Sridhar 408 505 3983**

# THINKING ABOUT BUYING A HOME?

## Get the right mortgage for your needs.



Whether you're a first-time homebuyer, are investing in real estate, or are looking to upgrade your lifestyle with a luxury home purchase, I'll help you understand your options and will stand by your side from application to closing. We offer many programs that may benefit you!

**CONTACT MARK FOR MORE INFORMATION TODAY**



**Mark Mayfield**
Originating Branch Manager
314.328.9914
Mark.Mayfield@myccmortgage.com
NMLS292254

**CrossCountry Mortgage, Inc.**
Two CityPlace Dr.
2nd Fl. Office 201 & 287A
St. Louis, MO 63141
NMLS3029 NMLS1828204

CrossCountry
More than a Mortgage
KUBERA MORTGAGE GROUP

Illinois Residential Mortgage Licensee. All loans subject to underwriting approval.
Certain restrictions apply. Call for details. NMLS3029 (www.nmlsconsumeraccess.org).

EQUAL HOUSING OPPORTUNITY